# தஞ்சை மாவட்ட திருக்கோயில்கள்




பயணிகள் கையேடு ரூ 1-50

3214



இராசராசன்



தஞ்சை

பெரிய

கோயில்

விமான

உட்புறத்

தோற்றம்



மெய்யன்புடையீர்,

தமிழர் வாழ்க்கை வளர்ச்சி, கலை, நாகரிகம், பண்பாடு அனைத்தும் அன்றும் இன்றும் திருக்கோயில்களை மையமாக வைத்தே வளர்ந்துள்ளது. கட்டிடக் கலையானாலும் சரி, ஓவியக் கலையானாலும் சரி, சிற்பக் கலையானாலும் சரி, நாட்டியக் கலையானாலும் சரி, சகல கலைகளிலும் தமிழர் மற்ற இனத்தவர்களுக்கு முன்னோடியாக தலைசிறந்த கலைஞனாக வாழ்ந்துவந்த நாகரிகத்தைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. அன்று அவர்கள் உருவாக்கி நமக்கு விட்டுச் சென்ற திருக்கோயில்களும் அதன் வழிவழியாக வந்த பாரம்பரியமாகும்.

சமயத்தை வளர்த்த தமிழன் தன் சமுதாயத்திற்கும் பயனுள்ளதாக அதை அமைத்துக் கொண்ட பெருமையும் திறமையும் அவன் விட்டுச் சென்ற கல்வெட்டுக்களிலிருந்து தெரிகிறது. கட்டிடக் கலைக்கும், சிற்பக் கலைக்கும், ஓவியக் கலைக்கும் இன்று நிகரற்று விளங்குவது இராச இராச சோழனின் பெருவுடையார் திருக்கோயிலாகும். இதேபோல் தஞ்சை மாவட்டம் அனைத்திலும் தமிழனின் ஏற்றத்திற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்ற திருக்கோயில்கள் பலப்பல.

நால்வர்களால் பாடப் பெற்றதும் நாயன்மார்களால் அற்புதங்கள் நிகழ்த்தப் பெற்றதுமான திருத்தலங்கள் நிறைந்த மாவட்டம் தஞ்சை மாவட்டமாகும். தமிழர்களுடைய சமய வாழ்வு தஞ்சை மாவட்டத்திலுள்ள இத்திருத்தலங்களில் சென்று வழிபடாமல் நிறைவு எய்தல் இயலாது. அவ்வாறு வழிபட வரும் மெய்யன்பர்களுக்கு வழிகாட்டியாகவும், ஓரளவு அத்திருத்தலங்களைப் பற்றிய குறிப்பு அறிந்து கொள்ளவும் உரிய முறையில் உள்ள கையேடு இல்லாதிருந்தது. இக்குறையை நீக்கி, தஞ்சை மாவட்டத்திற்கு வரும் பயணிகளுக்கு பயனுள்ளதாக இவ்வாண்டு சதய விழாவை ஒட்டி இக்கையேட்டை வெளியிட்டுள்ளோம். அனைவரும் பெற்று பயனடைவீர்களாக.

# தஞ்சாவூர்

தஞ்சை மாவட்டத் தலைநகராக விளங்கும் தஞ்சாவூரே ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சோழநாட்டிற்குத் தலைநகராக விசயாலயச் சோழமன்னரால் ஆக்கப்பட்டதாகும். சோழ மன்னர்களில் தலைச்சிறந்து விளங்கிய முதலாம் இராசஇராசன் 11ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கட்டிய மாபெரும் கோயிலே இராசஇராசேசுவரம் என வழங்கும் தஞ்சைப் பெரிய கோயிலாகும். இறைவன் : பெருவுடையார் இறைவி : பெரியநாயகி. இக்கோயிலில் விமானம், சிவலிங்கம், நந்தி இவை மூன்றும் இந்தியாவிலேயே மிகப் பெரியதாகும். விமானம் 216 அடி உயரமுடையது. அதன் அடித்தளம் பக்கம் ஒவ்வொன்றும் 96 அடி நீளம் கொண்டது. மேல் சிகரத்தைத் தாங்கியிருக்கும் பிரம்ம ரந்திக்கல் 80 டன் நிறைவுடன் ஒவ்வொரு பக்கமும் 25 அடி நீளம் கொண்ட சதுரமான ஒரே கருங்கல்லாகும். அதனை விமானத்தின் மேல் ஏற்ற 5 கல் தொலைவிலிருந்து சாரம் போடப்பட்டுள்ளது. அந்த இடத்திற்கு இன்னும் சாரப்பள்ளம் என்று பெயர் விமானத்தின் முதல் நிலையில் 108 தாண்டவச் சிற்பங்கள் செதுக்கப்பட்டிருப்பது கலைத் திறனின் எடுத்துக்காட்டு சிவலிங்கமூர்த்தியைச் சுற்றியுள்ள பிரகாரச் சுவர்களில் சோழ, நாயக்க மன்னர்கள் காலத்திய வண்ண ஓவியங்கள் இருக்கின்றன. அவற்றில் சிறந்தவை ஆனந்த தாண்டவம், திரிபுரதகனம், சுந்தரருன், சேரமான் கைலாயம் செல்லுதல் ஆகிய ஓவியங்களாகும். இக்கோயிலில் உள்ள நந்தி 25 டன் நிறையுடையது. உயரம் 12 அடி. நீளம் 19½ அடி. திருவாயிலிலுள்ள இருபாலகர்களும் 18 அடி உயரத்தில் 8 அடி அகலத்தில் கம்பீரமாக நிற்பது அரிய காட்சி. இக்கோயிலின் மாபெறும் சிவலிங்கத்தை நிறுவ பெருந்துணை புரிந்த கருவூர்த் தேவருக்குத் தனிக் கோயிலுமுண்டு. வடமேற்குப்பகுதியிலுள்ள முருகன் திருக்கோயில் அற்புத சிற்பங்கள் நிறைந்தவை. இறைவி பெரியநாயகியின் கோயிலை கோனேரின்மைக் கொண்டான் என்ற பாண்டிய மன்னன் கட்டியுள்ளான். இக்கோயில் தொல்பொருள் துறையினரால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

தஞ்சையில், அரண்மனை, அதனுள்ளே இருக்கும் சரசுவதிமால் என்கிற பெரிய நூல் நிலையம், மாடமாளிகை, கூடகோபுரம், சங்கீதமகால் சந்திரமௌளீசுவரசாமி கோயில், இருட்டுமால், கலைக்கூடம் சிவகங்கைத் தோட்டம் ஆகிய இடங்கள் காணவேண்டியவையாம். தஞ்சை நகரின் கிழக்கே 3 கல் தொலைவில் உள்ள புன்னைநல்லூரில் (மாரியம்மன் கோவில்) எழுந்தருளியிருக்கும் மாரியம்மன் பிரசித்திப்பெற்ற அம்மன். வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளும் பராசக்தி ஆதலின் பக்தர்கள் ஏராளமாக இந்த தேவியை வழிபடுகின்றனர்.

தஞ்சை நகரில் பங்காரு காமாட்சி அம்மன் கோவிலைத் தரிசிக்கலாம். மற்றும் இவ்வூருக்கு அருகாமையில் இருக்கும் திருவையாறு, தஞ்சை மாமணிக்கோயில், கரந்தை, திருப்பூந்துருத்தி, கண்டியூர், திட்டை, திருப்பழனம், திருவாலம்பொழில், திருக்காட்டுப்பள்ளி, திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, பருத்தியப்பர் கோயில், பெரும் புலியூர், ஆகிய தலங்கள் சென்று வழிபடல் எளிது.



# திருவையாறு

சுவாமி : ஐயாறப்பர், பஞ்சநதீசுவரர்
அம்பிகை : அறம் வளர்த்த நாயகி


இவ்வால்யம் (905-947) ஆண்ட சோழ மன்னன் முதற் பராந்தகன் காலத்தில் கட்டபட்டிருக்கவேண்டும் பின் விக்கிரம சோழன் திருப்பணி செய்ததாக கல்வெட்டு கூறுகிறது.


இது மூவர் பாடல் பெற்ற தலம். திருநாவுக்கரசர் கைலாயத்தில் ஒரு குளத்தில் எழுந்து கைலாயக்காட்சியினை தரிசித்துள்ளார்.

இங்கு சித்திரை மாதம் நடைபெறும் சப்த ஸ்தான விழா மிகவும் சிறப்பு வாய்ந்தது. இவ்விழாவில் திருவையாறு, திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிக்குடி, திருக்கண்டியூர், தில்லைத்தானம், திருப்பந்துருத்தி ஆகிய ஊர்களுக்கு பஞ்சநதீசுவரர் எழுந்தருளி இதர ஆலயங்களில் உள்ள மூர்த்திகளுடன் திருவையாற்றில் வந்து காட்சிதருவது கண்கொள்ளா காட்சியாகும்.

இக்கோயிலின் கிழக்கே சங்கீத மூர்த்தியான தியாகய்யரின் சமாதி கோயில் இருக்கின்றது. தியாகய்யர் திருவிழா ஆண்டு தோறும் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது. இத்தலத்தில் அரசினர் வடமொழி மற்றும் தமிழ் கல்லூரி இருக்கிறது. இக்கோயில் தருமை ஆதீனத்தின் நிர்வாகத்தில் உள்ளது.

குறிப்பு : இத்திருத்தலத்திற்கு தஞ்சாவூர் புகைவண்டி நிலையத்திலிருந்து திருவையாறு செல்லும் பேருந்து வசதி உண்டு. தஞ்சையிலிருந்து நகர பேருந்து வசதி உண்டு.






# சுவாமிமலை

திருவேரகம் என்பது ஆறுபடை வீடுகளில் ஒன்று. மலைநாட்டிலுள்ள ஒருபதி என்று சிலர் கருதின போதிலும், 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதர் காலம் முதல் கும்பகோணத்திற்கு மேற்கிலுள்ள சுவாமிமலையே திருவேரகமாகக் கொள்ளப்பெற்று வருகிறது. இப்பதிக்கருகிலுள்ள ஏரகரம் என்னும் ஊர் சிவபெருமானுக்கு முருகன் பிரணவ உபதேசம் செய்ததால் சுவாமிநாதன், குருநாதன், தகப்பன்சுவாமி என்ற பெயர்கள் ஏற்பட்டன.

கோயில் கட்டு மலைமேல் கிழக்கு நோக்கியது. மூன்று பிரகாரங்கள் அடிவாரத்தில் முதற்பிரகாரத்தில் மீனாட்சி, சுந்தரேசர் தனிச் சந்நிதி, மலைநடுவில் ஒரு பிரகாரம், மலைமேல் ஒரு பிரகாரம், அறுபது தமிழ் ஆண்டு கலைக் குறிக்கும் அறுபது படிகள் மேல் ஏறிச்சென்று சுவாமிநாதன் சந்நிதியை யடையவேண்டும். அவருடைய கம்பீரமான தோற்றம் கண்கவர் வனப்புடையது. மிகவும் மகிமை வாய்ந்த மூர்த்தி, நக்கீரர் திருமுருகாற்றுப் படையில் இத்தலத்தைப்பற்றிக் கூறியுள்ளார். அருணகிரியார் 56 திருப்புகழ்ப் பாடல்களில் இத்தலத்தைச் சிறப்பித்திருக்கிறார். இக்கோயில் குறைந்த செலவில் திருமணம் செய்ய ஏற்றது. ஏராளமான திருமணங்கள் ஆண்டுதோறும் இங்கு நடைபெறுகின்றது. பயணிகள் தங்க வசதிகள் உண்டு. கோடி அர்ச்சனை சமீபத்தில் முற்றுப்பெற்றது.

இதனருகிலுள்ள திருவலஞ்சுழி, பட்டீச்சுரம், சத்திமுற்றம், திருவைகாவூர், திருஇன்னம்பர், திருப்புறம் பயம், கொட்டையூர் முதலிய பாடல் பெற்ற தலங்களை வழிபட்டுவரல் எளிதானது.

குறிப்பு : இத்திருத்தலம் குடந்தை தஞ்சை புகைவண்டி தொடரில் உள்ளது. புகைவண்டி நிலையம் சுவாமிமலை. குடந்தையிலிருந்து நகர பேருந்து வசதி உள்ளது.

## தாராசுரம்

பண்டைய சோழ மன்னர்களுக்கு இரண்டாவது தலைநகரமாக விளங்கியது கும்பகோணத்துக்கருகிலுள்ள பழையாறை. இதன் ஒருபகுதி தாராசுரம். இராசராசபுரம் என்பது தாராசுரம் என்று மருவி வழங்குகின்றது. இங்கு இரண்டாம் இராசராசசோழன் கட்டிய கோயில் இராசராச ஈசுவரம். இப்போது ஐராவதேசுவரர் கோயில் என வழங்கி வருகிறது. அற்புதச் சிற்பவேலைப்பாடுகள் நிறைந்த கோயில்களில் இதுவும் ஒன்று. பலிபீடத்தின் படிகள் ஓசைக்கற்களால் அமைந்தது. பிரகாரத்திலுள்ள இராச கம்பீரன் திருமண்டபம், குதிரைகள் பூட்டிய சக்கரமுள்ள, தேர் போன்ற அமைப்புடையது. கர்ப்பகிரகத்தின் வெளிப்புறச்சுவர்களின் அடிப்பட்டியவில் அறுபத்துமூன்று நாயன்மார்களின் வரலாற்றுச் சிற்பங்கள் சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகை வரிசையில் அமைக்கப்பெற்றிருப்பது கண்டு மகிழத்தக்கது. திருச்சுற்றுமாளிகையில் சுவரில் 108 உருவங்களும் அவற்றின் கீழ்ப்பெயர்களும் காணப்பெறுகின்றன. இவை கோயிலில் தேவாரம் ஓதுபவர்களின் வடிவங்கள். அர்த்தநாரி, அகத்தியர், பிட்சானர், அன்னபூரணி, சரபமூர்த்தி, வாலிசுக்கிரீவன் போர், இடபகுஞ்சரம், மனித சக்கரம் முதலிய சிற்பங்கள் மிகவும் அழகானவை. இதனருகேயுள்ள பழையாறை, பட்டீச்சுரம், சத்திமுற்றம், திருவலஞ்சுழி, சுவாமிமலை முதலியன பார்த்து வழிபடவேண்டிய தலங்கள்.

குறிப்பு: இத்திருத்தலம் குடந்தை தஞ்சை புகைவண்டி தொடரில் உள்ள புகைவண்டி நிலையமாகும். குடந்தையிலிருந்து நகர பேருந்து வசதி உண்டு.

## கும்பகோணம்

கும்பகோணத்தில் தேவாரப்பாடல் பெற்ற மூன்று சிவத்தலங்களும், ஆழ்வார்களால் மங்களாசாசனம் பெற்ற ஒரு திவ்வியதேசமும் இருக்கின்றன. கும்பகோணம் கோயிலழகு என்ற பழமொழியுடையது. பிரமனுக்கும் கோயில் உண்டு.

திருக்குடந்தை சாரங்கபாணிசுவாமி கோயில்: இந்த கோயிலில் சயனசேவை சாதித்தருளும் பெருமானை நம்மாழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார், திருமழிசையாழ்வார் ஆகிய எழுவரும் 51 பாசுரங்களில் புகழ்ந்து பாடியருளியுள்ளனர். இறைவனுக்கு சாரங்கபாணி, ஆராவமுதன் என்றும், தாயாருக்கு கோமளவல்லி என்ற திருநாமங்கள் வழங்குகின்றன. கோபுரம் பதினொரு நிலைகளையும், 150 அடி உயரமும் உடையது. தேரும் மிகப்பெரியது. உள்ளே பெருமாள் சந்நிதிக்குச்செல்ல உத்தராயண தட்சிணாயன வாசல்கள் இரண்டுள்ளன. இக்கோயிலில் கர்ப்பக்கிரக விமானம் முன் மண்டபமும் தேரில் இருப்பதுபோல் அமைந்துள்ளது, அழகு மிகுந்ததாகும்.

திருக்குடமூக்கு; கும்பேசுவரர் கோயில்: சுவாமி கும்பேசுவரர், அம்மன் மங்களாம்பிகை; அப்பர், சம்பந்தர் பாடல் பெற்றது. இங்குள்ள முருகனுக்கு ஆறு திருமுகங்களும், தனிச்சிறப்பாக ஆறு திருக்கரங்கள் மட்டுமே உள்ளன. மகாமகக் குளத்தில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் மாமாங்கம் என்னும் பெருவிழா நடைபெறும். இந்தியாவில் நடைபெறும் மிகப்பெரும் விழாக்களில் இதுஒன்று. இத்திருக்குளத்தில் ஒன்பது நதிக் கன்னியர் தீர்த்தம், எட்டுத்திக்குப் பாலகர் தீர்த்தம், ஒரு பிரம தீர்த்தம் நடுவே அறுபத்தாறுகோடி தீர்த்தம் ஆகப் பத்தொன்பது தீர்த்தங்கள் இருக்கின்றன. கரைமேல் உள்ள 16 மண்டபங்களில் இலிங்க மூர்த்திகள் கோயில் கொண்டிருக்கின்றனர்.

திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம்; நாகேசுவரர் கோயில்: திருநாவுக்கரசரின் திருப்பதிகம் பெற்றது. இக்கோயிலில் நடராச சபை மிகச் சிறந்தது. தேர் போல் உருளைகளுடன் யானைகளும் குதிரைகளும் இழுக்கும் பாவனையில் கருங்கல்லால் கட்டப்பெற்றிருக்கின்றது. நாகேசுவரர், பெரியநாயகி என்பது சுவாமி அம்பாளின் திருநாமங்கள். சித்திரை மாதம் 11, 12, 13ஆம் தேதிகளில் சூரியகிரணங்கள் இலிங்கத்தின்மேல் படுகின்றன.

திருக்குடந்தைக்காரோணம்: காசிவிசுவநாதர் கோயில்: மகாமகக்குளத்தின் வடபால் இருக்கின்றது. ஞானசம்பந்தரால் பாடல் பெற்றது. கங்கை யமுனை, சரயு, நருமதை, சரசுவதி, கோதாவரி, பயோடினி, காவிரி, குமரி ஆகிய ஒன்பது நதிக்கன்னியரின் திருவுருங்கள் இக்கோயிலில் இருக்கின்றன.

சோமேசர் கோயில்: வைப்புத்தலம் திருப்புகழ்ப்பாடல் பெற்றது—வியாழன் வழிப்பட்டது.

இராமசாமி கோயில்: கடைத்தெருவின் தென்கோடியில் இருக்கின்றது. தூண்களில் அற்புதச் சிற்பங்கள் உள்ளன. பிரகாரச் சுவர்களில் இராமாண வரலாறு முழுவதும் ஓவியங்களாகத் தீட்டப்பெற்றிருக்கின்றது. குடந்தை நகரில் காசிமடம் காவிரிக் கரையில் அமைந்துள்ளது. சுவாமிமலை, திருநாகேசுவரம், ஒப்பிலியப்பன்கோயில், சிவபுரம், சாக்கோட்டை, திருச்சேறை, நாச்சியார்கோயில் முதலிய தலங்களை குடந்தை செல்பவர்கள் வழிபடல் எளிதாகும். (நாச்சியார்கோயிலில் கல்கருடன் சிறப்பானதாகும்).

# ஒப்பிலியப்பன் கோயில்

பெருமாள் : ஒப்பிலியப்பன்
தாயார் : பூமிதேவி தாயார்.

இத்தலத்திற்கு கும்பகோணத்திலிருந்து டவுன் பஸ் அடிக்கடி உள்ளது. திருநாகேஸ்வரம் ரயில் நிலையத்திலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. மங்களா சாசனம்செய்துள்ளவர்கள். பேயாழ்வார், நம்மாழ்வார், திருமங்கை ஆழ்வார், பொய்கை ஆழ்வார். பெருமாளுக்கு உப்பில்லாத பிரசாதங்களே தினமும் தளிகை செய்யப்படுகின்றது. இத்தலத்தில் ஆண்டுதோறும் ஏராளமான திருமணங்கள் நடைபெறுகின்றன. பக்தர்கள் தங்க வசதியுண்டு. திருமண மண்டபம் உள்ளது. வைணவத்தலங்களில் மிகவும் சிறப்புப் பெற்ற தலமாகும். திருவிண்ணகர் என்றும் இத்தலம் வழங்கும்.

வேண்டுவோர் வேண்டுவதை ஈந்தருளும் மகிமை வாய்ந்த பெருமாள் - பிரார்த்தனைத்தலமாக விளங்குகிறது. பக்தர்கள் கூட்டம் இத்தலத்திற்கு அதிகரித்துக் கொண்டுள்ளது. (இவ்வூர் அருகே திருநாகேசுவரம் பாடல் பெற்ற சிவதலம் உள்ளது)

குறிப்பு : இத் திருத்தலத்திற்கு குடந்தையிலிருந்து நகர பேருந்து வசதி உண்டு. புகைவண்டி நிலையம் திருநாகேசுவரம்.




# திருவிடைமருதூர்

வடக்கே ஆந்திர நாட்டிலுள்ள ஸ்ரீ சைலம் என்ற மல்லிகார்ச்சுனத்திற்கும், தெற்கே திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள புடார்ச்சுனத்திற்கும் (திருப்புடைமருதூர்) நடுவேயுள்ளது மத்தியார்ச்சுனம் என்ற திருவிடைமருதூர். இது மூவராலும் பாடப்பெற்ற பதி. கோயில் மிகப் பெரியது. திருவிடைமருதூர் தெரு அழகு என்பதற்கிணங்க தேரோடும் நான்கு வீதிகளும் நீண்டு அகன்று அமைந்தவை. இங்கு வரகுண பாண்டியன், பட்டினத்தார், பத்திரகிரியார் ஆகியோர் வழிபட்டுப் பேறு பெற்றனர். இக்கோயிலின் முகாம்பிகை சந்நிதி தனி சிறப்புடையது. சுவாமி மகாலிங்கேசர், பெருநல மாங்கிலம்மை இக்கோயில் திருவாவடுதுறை ஆதீனத்தின் ஆட்சியிலிருந்து வருகிறது. ஆண்டுதோறும் திருமுறைப் பாராயணமும், திருமுறைக் கருத்தரங்கும் கோயிலில் சிறந்த நிகழ்ச்சிகளாகும்.

அருகிலுள்ள ஆடுதுறை, சூரியனார் கோயில், திருநீலக்குடி முதலியவை தரிசிக்கவேண்டிய தலங்கள்.

குறிப்பு : குடந்தை மாயூரம் புகைவண்டி, பேருந்து சாலையில் உள்ளது. குடந்தையிலிருந்து நகர பேருந்து வசதி உண்டு. புகைவண்டி நிலையம் திருவிடைமருதூர்.





## தேரழுந்தூர்

இவ்வூரில் மங்களாசாசனம்பெற்ற திவ்விய தேசமும், தேவாரப் பாடல் பெற்ற சிவன்கோயிலும் உள்ளன. திவ்வியப்பிரபந்தத்திலும் திருமுறைகளிலுல் திருவழந்தூர் என்ற பெயரே காணப்படுகிறது. இப்போது தேரழுந்தூர் என வழங்குகின்றது. திருமால் கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன் திருநாமம் ஆமருவியப்பன். தாயார் : செங்கமலவல்லி. திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பெற்றது. தமிழில் சிறந்த காவியமான இராமாயணத்தை எழுதிய கம்பர் இவ்வூரில் பிறந்தவர். அவர் வாழ்ந்த இடம் கம்பர்மேடு என வழங்குகின்றது. கோயிலில் அவர், அவர் மனைவி திருவுருவங்கள் இருக்கின்றன. கோயில் நிர்வாகத்தினர் ஆண்டுதோறும் கம்பனுக்கு மிகச் சிறப்பாக விழா எடுக்கின்றனர். திருவழுந்தூர் வேதபுரீசுவரர் கோயில் ஆமருவியப்பன் கோயிலுக்குக் கிழக்கேயுள்ளது. சம்பந்தரால் பாடப்பெற்றது. அம்பிகை சௌந்தரநாயகி. கர்ப்பக்கிரகத்திலுள்ள மூலவிக்கிரகத்தின்மேல் மாசிமாதம் 23, 24, 25 ஆகிய மூன்று நாட்களிலும் சூரிய கிரணங்கள் விழுகின்றன. கோபுரத்தில் சங்கு ஊதுவதுபோன்றுள்ள ஒரு உருவத்தைக் கம்பர் வளர்ப்புத் தந்தையாகிய உவச்சர் என்று கூறுகின்றனர்.

## திருபுவனம்

இத்தலம் திருவிடைமருதூர் புகைவண்டி நிலையத்திலிருந்து இரண்டு கிலோ மீட்டர் மேற்கேயிருக்கிறது. திரிபுவனவீரபுரம் என்பது பழைய பெயர். திருபுவன வீரதேவன் என்ற பட்டப்பெயரையுடைய மூன்றும் குலோத்துங்க சோழனால் கட்டப்பெற்றது. தஞ்சாவூர், கங்கைகொண்ட சோழபுரம் போல் கர்ப்பக்கிரகத்தின்மேல் உயர்ந்த விமானம் உடையது. இக்கோயில் மிக்க அழகுடையதாகும். இரணியனைக் கொன்ற கோபம் தணியாதிருந்த நரசிங்கமூர்த்தியை அடக்க சிவபெருமான் சரபப் பறவை வடிவெடுத்து அமைதியடையச் செய்தார். அந்த சரபமூர்த்தியின் சந்நிதி மிகச் சிறப்புடையது. சுவாமி பெயர்: கம்பகரேசுவரர் அல்லது நடுக்கந்தீர்த்த பெருமான், அம்பிகை : அறம்வளர்த்த நாயகி. இக்கோயில் தருமபுர ஆதீன ஆட்சியில் இருக்கிறது.

குறிப்பு: குடந்தை மாயூரம் சாலையில் உள்ளது. நகர பேருந்து வசதிகள் உண்டு.



# திருவாவடுதுறை

## திருவாவடுதுறை ஆதினம்

தமிழ்நாட்டிலுள்ள திருமடங்களில் திருவாடுதுறை ஆதீனம் தொன்மையும், பெரியதுமாகும். இம்மடத்தில் தமிழ் இலக்கிய, சமய நூல்களில் மிகவும் சிறந்த விலைமதிக்கபெறாத அரிய நூல்களை அச்சிட்டு இலவசமாக வெளியிட்டுள்ளது இம்மடத்தின் சிறப்பாகும். இம்மடத்திற்கு ஏராளமான சொத்துக்கள், தஞ்சை, நெல்லை, ராமநாதபுரம், மதுரை மாவட்டங்களில் இருக்கின்றன. தர்மங்கள் பல இம்மடத்தில் செய்யப்பட்டுவருகின்றது: திருப்பெருந்துறை (ஆவுடையார் கோயில், திருவிழிமழலை ஆகியவைகளாகும். இம்மடத்தில் 22 வது குருமகா சந்நிதானத்தின் அருளாட்சி நடைபெறுகின்றது.

திருவாவடுதுறை கோயிலில் எழுந்தருளியிருக்கும் சுவாமி கோமுக்தீசுவரர் (செம்பொற்றியாகர்) அம்பிகை: ஒப்பிலாமுலையம்மை. இத்தலம் மூவராலும் பாடப்பெற்றது. திருமூலர் இவ்வூரில் இருந்துதான் மூவாயிரம் பாடல்களைக் கொண்டு திருமந்திரம் என்ற நூலை இயற்றினார்.

குறிப்பு: மாயூரம் குடந்தை பேருந்து தடத்தில் உள்ளது.
புகைவண்டி நிலையம், ஆடுதுறை.

## திருப்பனந்தாள் :

இவ்வூரில்தான் காசி மடம் உள்ளது. தமிழகத்திலுள்ள சிறந்த மடாலயங்களில் இது ஒன்று. கல்வி, சமய வளர்ச்சி மற்றும் அன்னதானம் இவைகளுக்காக சுமார் 500 அறக்கட்டளைகள் ஏற்படுத்தி அதற்கு ஒரு கோடிக்கும் அதிகமான தொகையினை முதலீடு செய்து தர்மங்களை நிரந்தரமாக செய்ய இத்திருமடம் ஏற்பாடு செய்துள்ளது பெருமைப்படத் தக்கதாகும். திருப்பனந்தாளில் தமிழ்க் கல்லூரியும், திருவைகுண்டத்தில் கலைக்கல்லூரியும் நடத்தப்பட்டு வருகிறது. "குமரகுருபரன்" மாத இதழ் இவ்விடத்தின் இலக்கிய ஏடாகும். திருக்குறள்; திருமுறைகள், முதலிய தமிழ் இலக்கிய சமய நூல்களை மலிவுப்பதிப்பில் அச்சிட்டு வெளியிட்டுள்ளது இம்மடத்தின் சிறப்பாகும். இத்தலத்தில் பாடல் பெற்ற சிவத்தலம் உள்ளது. சுவாமி: அருணசடேசுவரர் அம்பிகை: பெரியநாயகி. சம்பந்தரால் பாடப்பெற்றது.

சாய்ந்திருந்த சிவலிங்கத்தை குங்கிலியக்கலய நாயனார் கழுத்தில் கயிற்றைக்கட்டி நிமிர்த்தியுள்ளார் என்பது இத்தலத்தின் சிறப்பு. இக்கோயில் தருமை ஆதீனத்தின் நிர்வாகத்திற்குட்பட்டதாகும்.

சூரியனார் கோயில் இதன் அருகாமையில் உள்ள சூரியன் பிரதான தலம். கங்கைகொண்ட சோழபுரம் இவ்வூரிலிருந்து 20 கல் தூரத்தில் உள்ளது.

குறிப்பு : கும்பகோணம் அணைக்கரை பேருந்து மார்க்கத்தில் உள்ளது. குடந்தையிலிருந்து நகர பேருந்து வசதியுண்டு.

## தருமபுரம்

தமிழகத்திலுள்ள திருமடங்களில் மிகவும் புகழ் பெற்றது. இம்மடம் திருவில்லிப்புத்தூரில் அவதரித்த குருஞான சம்பந்தரால் பதினாறாம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பெற்றது. தற்போது ௨6வது குழு மகாசந்நிதானத்தின் அருளாட்சி நடைபெற்றுக்கொண்டு வருகிறது ௨5வது கயிலை குருமகாசந்நிதானத்தின் ஆட்சி காலத்தில் இத்திருமடத்தின் ஆட்சியில் உள்ள 27 திருக்கோயில்களும் திருப்பணியும், திருகுட நீராட்டு விழாவும் செய்யப்பெற்று செம்மையுடனும் தூய்மையாகவும் பரிபாலிக்கப்பட்டு மடத்தின் புகழ் ஓங்கியது. இத்திரு மடத்தில் குருபூஜை திருவிழா ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெறுகிறது. ஞானசம்பந்தன் எனும் மாத இதழ் இம்மடத்தின் வெளியீடு. இத்திரு மடத்தில் புகழ்மிக்க தமிழ்க் கல்லூரி, வேத, ஆகமப் பாடசாலைகள் நடத்தப்படுகின்றன. 650க்கும் மேற்பட்ட சமய, இலக்கிய நூல்களை இம்மடம் வெளியிட்டுள்ளது, பெருமைப்படத் தக்கதாகும்.

இத்திருமடத்திலுள்ள தர்மபுரிசுவரர் ஆலயமும் துர்க்கையம்மன் கோயிலும் தரிசிக்கவேண்டியவைகள்.

குறிப்பு : இத்திருத்தலம் மாயூரம் தரங்கம்பாடி பேருந்து சாலையில் உள்ளது. மாயூரத்திலிருந்து நகர பேருந்து வசதி உண்டு. புகைவண்டி நிலையம் மாயூரம்.



## திருப்புன்கூர்

திருப்புன்கூர் மூவராலும் பாடப்பெற்ற பதி. இது வைத்தீசுவரன்கோயிலுக்கு மேற்கில் மூன்று கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. இவ்வூருக்கருகிலுள்ள ஆதனூரில் அவதரித்த திருநாளைப்போவார் என்ற நந்தனாருக்காக நந்தி விலகிய இடம். பெரிய நந்தி இறைவன் சந்நிதியை விட்டு சற்று விலகியிருக்கிறது. சந்நிதித் தெருவில் கூப்பிய கரங்களுடன் வழிபடும் நந்தனார் திருவுருவத்தைக் காணலாம். கோயிலுக்குள் பிரகாரத்தில் நந்தனார் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறார். கோயிலுக்கு மேல்புறம் நந்தனார் வெட்டிய திருக்குளம் இருக்கிறது. ஏயர்கோன் கலிக்காமநாயனார் கோயிலுக்குப் பல திருப்பணிகள் செய்திருக்கிறார். கலிக்காமர் இறைவன் 12 வேலி நிலம் பெற்றுக் கொண்டு மழை பெய்யச் செய்தார். வெள்ளம் அதிகமாவே மீண்டும் 12 வேலி நிலம் பெற்று வெள்ளத்தைக் குறைத்தார். இந்த நிகழ்ச்சி திருமுறைகளில் குறிக்கப் பெற்றிருக்கிறது. புன்கமரம் தல விருட்சமாதலால் திருப்புன்கூர் என்று பெயர். இறைவன் சிவலோகநாதர் இறைவி சொக்கநாயகியம்மை.



# திருச்செங்காட்டங்குடி

இத்தலம் நன்னிலம் புகைவண்டி நிலையத்திற்குக் கிழக்கே பத்து கிலோ மீட்டர் தொலைவிலிருக்கிறது. இத்தலத்தில் பிறந்த பரஞ்சோதியார் என்ற பல்லவ சேனாதிபதி வடக்கே வாதாபியை வென்ற பெருமை யுடையவர். பின்னர் சிவபெருமானுக்குத் தன் பிள்ளையின் கறியைச் சமைத்துப் படைத்து சிறுத்தொண்ட நாயனார் என்றும் பெயர் பெற்றார். விநாயகர் யானைமுக அசுரனைக் கொன்ற இரத்தம் பெருகியதால் செங்காட்டங்குடி என்று பெயர். அவர் இங்கு இறைவனை வழிபட்டதால் கோயிலுக்கு கணபதிச்சரம் என்று பெயர். அப்பர் சம்பந்தர் பாடிய பதிகங்களில் சிறுத்தொண்டரின் பெருமையைச் சிறப்பித்துள்ளனர். இங்குள்ள உத்திராபதியார் சந்நிதி பார்க்க வேண்டியது. இறைவன் : கணபதீசுவரர், இறைவி : திருக்குழல் நாயக், தலவிருட்சம் ஆத்தி.

இப்பதிக்குச் செல்வோர் அருகிலுள்ள திருமருகல், திருக்கண்ணபுரம், இராமதீச்சரம், திருப்புகலூர் இவற்றை வழிபட்டு வரல் எளிதானது.



U. V. S. IY
AS-90



## திருக்கடையூர்

திருக்கடவூர் மாயூரத்திற்குக் கிழக்கே 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. அப்பர், சம்பந்தர், சுந்தரர் மூவராலும் பாடப்பெற்றது. இது எட்டு வீரட்டத்தலங்களுள் ஒன்று. சிவபெருமான் மார்க்கண்டேயனுக்காக எமனை அழித்த இடம். காலசங்காரமூர்த்தி திருவுருவம் தரிசிக்கத் தக்கது. சுவாமி: அதிர்தகடேசுவரர், அம்பிகை: அபிராமியம்மை. காரிநாயனர் குங்கிலியகலய நாயனர் இருவரும் அவதரித்துத் தொண்டு புரிந்த பதி. சைவ சித்தாந்த நூலாகிய திருக்களிற்றுப்படியாரை அருளிய உய்யவந்த தேவநாயனரும் தோன்றியது. இத்தலத்தேதான் அருணகிரிநாதர் திருப்புகழ் பாடலுமுண்டு. அபிராமி அந்தாதிபாடி, அபிராமி. அம்மனின் திருவருளால் அமாவாசையன்று முழு நிலவை அரசனுக்குக் காட்டிய அற்புதம் நிகழ்த்தியது, அபிராமி பட்டர் பிறந்ததும் திருக்கடவூரிலேதான்.

இதற்கு கிழக்கேயுள்ள திருக்கடவூர் மயானம் என்ற மூவர் பாடல் பெற்ற தலமும் வழிபடத்தக்கது.

குறிப்பு: இத்திருத்தலம் மாயூரத்திலிருந்து பொரையாறு பேருந்து நிலைய பாதையில் உள்ளது. மாயூரம் தரங்கம்பாடி புகை வண்டித் தொடரில் இப்புகைவண்டி நிலையம் உள்ளது.

# திருப்புகலூர்

திருப்புகலூர் மூவராலும் பாடப்பெற்ற பதி. திருநாவுக்கரசர் 'புண்ணியா வுன்னடிக்கே போதுகிறேன்' என்று பாடி இறைவன் திருவடியடைந்த இடம். முருக நாயனார் நந்தவனம் வைத்து மலர் பறித்து பூத்தொண்டு நிகழ்த்தினார். அவர் வழிப்பட்ட வர்த்தமானீசுவரர் கோயில் இக்கோவிலேயே இருக்கிறது. இதற்குத் தனியே சம்பந்தர் பாடல் உண்டு. திருப்புகலூர் சுவாமியின் திருநாமம் அக்னீசுவரர், அம்பிகையின் திருநாமம் கருந்தார்க்குழலி. கோயிலைச் சுற்றி அகழிபோன்ற திருக்குளம் இருக்கிறது. இதற்கு அக்கினி தீர்த்தம் என்று பெயர். இத்தலத்து இறைவன் பேரில் மிகவும் ஈடுபாடுள்ள நெற்குன்றவாணர் என்பவர் இயற்றிய திருப்புகலூர் அந்தாதி மிகவும் புகழ்பெற்றது. இக்கோயிலில் வேதபாடசாலை உள்ளது. பயணிகள் தங்கும் விடுதியும் உள்ளது.

திருக்கன்னபுரம், திருமருகல், திருச்செங்காட்டங்குடி, சீயாத்தமங்கை, இராமன தீச்சரம் ஆகிய முக்கிய தலங்கள் திருப்புகலூருக்கு அருகாமையில் அமைந்துள்ள அழகான தலங்களாகும்.

குறிப்பு: இத்திருத்தலம் நன்னிலம் நாகப்பட்டினம் பேருந்து மார்க்கத்தில் உள்ளது. புகைவண்டி நிலையம்: நன்னிலம்.



## மாயூரம்

சம்பந்தர், அப்பர் முதலியவர்களால் பாடப்பெற்ற பதி. திருமயிலாடுதுறை என்பது இப்போது மாயூரம் என்று வழங்குகிறது. பார்வதிதேவி மயில் (மயூரம்) உருவம் கொண்டு இறைவனை வழிபட்டதால் மயிலாடுதுறை, மாயூரம் என்ற பெயர் ஏற்பட்டது. ஒன்பது நிலைகளையுடைய உயர்ந்த கோபுரம் கோயிலின் அணி செய்கின்றது. சுவாமி: மாயூரநாதர், அம்பிகை: அபயாம்பிகை. ஐப்பசி மாதம் முழுவதும் காவிரியில் சுவாமி தீர்த்தம் கொடுப்பர். கடைமுழுக்கு என்பது மிகவும் சிறந்தது. இக்கோயில் திருவாவடுதுறை ஆதீனத்தின் ஆட்சிக்குட்பட்டது. இதற்கு மேற்கேயிருக்கும் ஐயாறப்பர் கோயிலும், காவிரிக்கரையிலுள்ள விசுவநாதர் கோயிலும், கூறைநாட்டிலுள்ள புனுகீசுவரர் கோயிலும், காவிரிக்கு வடக்கேயுள்ள வள்ளலார் கோயிலும் வழிபட வேண்டியவை.

திருநன்றியூர், திருவிளநகர், செம்பொனார் கோயில், வழுவூர், திருநளிப்பன்றி மூவலூர், பரசலூர், பெரம்பூர் ஆகிய தலங்கள் அருகாமையில் இருப்பவைகளாகும்.

குறிப்பு: புகைவண்டி நிலையம் மாயூரம் சந்திப்பு.
மாயூரம் நகர பேருந்து வசதி உண்டு.



# திரு இந்தளூர்

மாயூரம் நகராட்சிக்குட்பட்ட காவிரியின் வடகரையில் இருக்கும் திருவிழந்தூர் ஆகும்.

பஞ்சரங்கத் தலங்களில் இத்தலம் ஒன்று.

பெருமாள் : பரிமளரெங்கநாதர், தாயார் : புண்டரீகவல்லி.

திருமங்கையாழ்வார் பாடல் பெற்றது.


பெருமான் பச்சைத்திருமேனியுடன் வீரசயனத்தில் பள்ளி கொண்டிருக்கும் காட்சி எழில் மிக்கதாகும்.


ஏனைய நான்கு அரங்கள் : திருவரங்கப்பட்டினம் (மைசூர்) திருவரங்கம், அப்பாலங்கம் (கோயிலடி) கும்பகோணம்.

இவ்வூர் கீழ வீதியில் சந்நிதிக்கெதிரில் இருக்கும் ஆஞ்சநேயர் பிரசித்திப் பெற்ற மூர்த்தி. நீடூர் இவ்வூருக்கு வடக்கே 3 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள பாடல் பெற்ற சிவதலம். முனையடுவார் நாயனார் அவதரித்த இடம்.

திருவேள்விக்குடி, திருமணஞ்சேரி, குத்தாலம் ஆகிய தலங்கள் அருகில் இருப்பவைகள்.

குறிப்பு : புகைவண்டி நிலையம் : மாயூரம்.





# பூம்புகார்

பூம்புகார் பண்டைச் சோழமன்னர்களின் தலைநகரமாகவும், துறைமுகப் பட்டினமாகவும் விளங்கியது. வரலாற்றுச் சிறப்புப்பெற்றது. சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காவியங்கள் எழுவதற்கு இடமாய் அமைந்தது. கடலுள் மாய்ந்துவிட்ட பூம்புகாரை இன்றையதினம் தமிழக அரசு அதன் பண்டைப் பெருமையை உலகுக்குத் தெரிவிக்க எழுநிலைமாடம், கண்ணகிகோயில், மாதவிசிலை முதலியன அமைத்து விழாக்கொண்டாடியது. பூம்புகார் வரலாறு கூறும் கலைக்கோயிலாகும். இவ்வூரில் இரண்டு பாடல்பெற்ற தலங்கள் உள்ளன. அவை காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரம், திருச்சாய்க்காடு என்ற சாயாவனம்.

பல்லவனீச்சரம் இயற்பகை நாயனாரும், பட்டினத்தாரும் அவதரித்த திருப்பதி. இது சம்பந்தரால் பாடல் பெற்றது. ஆடி, புரட்டாசி, தை அமாவாசைகளில் இங்கு காவிரி கடலோடு கலக்கும் சங்கமத்தில் நீராடுவது சிறப்பானது. இறைவன் பல்லவனேசர், தேவி சௌந்தரநாயகி.

சாயாவனம், அப்பர் சம்பந்தரால் பாடப்பெற்றது. இறைவன் சாயாவனேசுவரர், இறைவி குயிலினுநன்மொழியம்மை. இக்கோயிலில் தேர்போன்ற இந்திர விமானம் பார்க்கத் தக்கது. வில்லேந்திய வேலன் திருவுருவம் மிகவும் வனப்பு வாய்ந்தது. சிலப்பதிகார காலத்திலேயே காவல் தெய்வமாக இருந்த சம்பாபதியம்மன் கோயில் இக்கோயிலுக்குத் தென்புறமிருக்கிறது.

குறிப்பு: பூம்புகார் கலைக்கூடம் சீர்காழியில் இருந்து 21 கிலோ மீட்டர் தொலைவிலும் மாயூரத்திலிருந்து 29 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது. அங்கு சென்றிட பேருந்து வசதியுண்டு.





# வைத்தீசுவரன் கோயில்

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோரால் பாடல் பெற்ற இத்தலத்திற்கு புள்ளிருக்குவேளூர் என்று பெயர். சம்பாதி, சடாயு, இருக்குவேதம், முருகவேள் ஆகியோர் வழிப்பட்டதால் இப்பெயர் ஏற்பட்டது. இறைவன்: வைத்தியநாதன், அம்பிகை: தையல்நாயகி இங்குள்ள முத்துக்குமாரசுவாமி சந்நிதி மிகவும் மகிமை வாய்ந்தது. சித்தாமிர்த தீர்த்தத்தில் மூழ்கி இறைவனை வழிபட நோய்கள் நீங்கும் என்பது பிரத்தியட்சம். இது சிறந்த பிரார்த்தனைத்தலம். மாதக் கார்த்திகையில் ஏராளமான மக்கள் வழிபட்டு சந்தனக்குழம்பு பெறுவது கண்கொள்ளாக் காட்சியாகும். முத்துக்குமாரனுக்கு அர்த்தசாம பூசையில் சாத்தப்படும் நேத்திரப்பிடி சந்தனத்தை வாங்கி அணிபவர்கள் எல்லா நலனும் பெறுவர். அருணகிரிநாதர் இத்தலத்து முருகன் பேரில் பதினன்கு திருப்புகழ்ப் பாடல்களைப் பாடியருளியிருக்கிறார். இக்கோயில் தருமை ஆதீன ஆட்சியில் இருந்து வருகின்றது.

இத்திருக்கோயிலில் சித்தவைத்தியசாலை, குழந்தைகள் அன்பு இல்லம் நடத்தப்படுகின்றது. பணிகள் தங்கும் விடுதி உள்ளது.

நந்தி: நந்தனுருக்காக விலகிக் கொடுத்த தலம் திருப்புன்கூர். இத்தலத்திலிருந்து மேற்கே 3 கிலோ மீட்டர். குறுமாணக்குடி, திருவாளப்புத்தூர், திருக்குருப்பறியலூர், திருக்குருக்காக, இலுப்பப்பட்டு ஆகிய பாடல்பெற்ற தலங்கள் அருகாமையில் உள்ளது.

குறிப்பு: புகைவண்டி நிலையம் வைத்தீசுவரன் கோயில்,
பேருந்து நிலையமும் இருக்கிறது.

# சீர்காழி

காழி என்றும், சீகாழி என்றும் திருமுறைகளிலும் புராதனங்களிலும் பெயர்கள் காணப்படுகின்றன. இவ்வூருக்குப் பன்னிரண்டு திருப்பெயர்கள் உண்டு. திருஞானசம்பந்தர் அவதரித்த பேறு பெற்றது. ஸ்வாமி பிரமபுரீசுவரர் அம்பிகை திருநிலைநாயகி. மூலத்தானத்தையொட்டி கட்டுமலைக் கோயிலில் எழுந்தருளியிருப்பவர் தோணியப்பர். இருபது பறவைகள் ஏந்துவதுபோல் கட்டப்பெற்றிருக்கிறது. இதற்கு தென்புறம் கோயில் கொண்டிருக்கும் சட்டைநாதர் மிகவும் சக்தி வாய்ந்த தெய்வம். திருஞான சம்பந்தருக்குத் தனிக்கோயில் உண்டு. ஆண்டுதோறும் நடைபெறும் ஞானப்பால் விழா மிகவும் பிரபலமானது. சம்பந்தர் 7 பதிகங்களும், அப்பர் 3 பதிகங்களும், சுந்தரர் 1 பதிகமும் ஆக 71 பதிகங்கள் இத்தலத்தைப் பற்றியவை. கணநாதநாயனர் இவ்வூரில் அவதரித்து அன்பர்களுக்கு கைத்தொண்டில் பயிற்சியளித்தார். அருணகிரிநாதர் இத்தலத்தைப்பற்றி, 29 திருப்புகழ் பாடல்களில் சிறப்பித்திருக்கிறார். இக்கோயில் தருமபுர ஆதீன ஆட்சியிலிருந்து வருகிறது.

சீகாழிக்கு அருகிலுள்ள திருக்கோலக்கா, தடாளன்கோயில் இவற்றை வழிபடல் எளிதானது. இங்கிருந்து திருவெண்காடு, திருநாங்கூர், வைத்தீசுவரன் கோயில், சாயாவனம், பல்லவனேசுவரம், பூம்புகார் ஆகிய பல தலங்களுக்குச் சென்று வழிபடலாம். பஸ் வசதியுண்டு.

குறிப்பு: புகைவண்டி நிலையம், சீர்காழி. பேருந்து நிலையமும் இருக்கிறது.



# திருவெண்காடு

சீர்காழி புகைவண்டி நிலயத்திற்குத் தென்கிழக்கே 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. மூவர் பாடல் பெற்றது. புதனுக்கு தனிக்கோயில் உண்டு. திருவெண்காட்டடிகள் என்ற பட்டினத்தார் வழிபட்டுப் பேறு பெற்றது. சுவாமி: சுவேதாரனியர், அம்பிகை: பிரமவித்தியா நாயகி. இக்கோயிலுள்ள முக்குள நீர் மிகப் பெருமை வாய்ந்தது. இந்த மூன்று குளங்களிலும் நீராடி வெண்காட்டீசரை வழிபட்டு, அச்சுதகனப்பாளரும் அவர் மனைவியாரும் மெய்க்கண்டாரைப் பெற்றெடுத்தவர். மெய்கண்டார் இயற்றிய சிவஞானபோதம் சைவ சித்தாந்த சாத்திரத்தினை மணிநூல் இப்பதியின் மகிமைக்கு மிக முக்கியமான காரணமாக இருப்பது. அகோர மூர்த்தியின் சந்நிதி. நடராசர் சபையும் சிதம்பரம் போலவே அழகாக அமைந்திருக்கின்றது. சிறுத்தொண்டநாயனரின் மனைவியார் திருவெண்காட்டு நங்கையார் இவ்வூரைச் சார்ந்தவர். இத்திருக்கோயிலில் ஆண்கள் உயர்நிலைப்பள்ளியும், பெண்கள் உயர்நிலைப்பள்ளியும் நடத்தப்படுகின்றது. பயணிகள் விடுதி வசதியுடன் இருக்கிறது.

இதற்கு அருகிலுள்ள கீழைத்திருக்காட்டுப்பள்ளி, திருநாங்கூர், திருநகரி பூம்புகார், பல்லவனேசுவரம், சாயவனம், திருவலம்புரம் ஆகிய தலங்கள் அருகாமையில் உள்ள தலங்களாகும்.

குறிப்பு: இத்திருத்தலம் சீர்காழியிலிருந்து காவிரிப்பூம்பட்டிணம் பேருந்து சாலையில் உள்ளது. புகைவண்டி நிலையம் சீர்காழி.

# திருவாரூர்

திருவாரூர்க் கோயில் தென்னாட்டிலுள்ள மிகப் பெரிய கோயில்களில் ஒன்று. இக்கோயிலில் சாயரட்சைக் கால பூசை பிரசித்தி பெற்றது. வேறெங்குமில்லாத பஞ்சமுக வாத்தியம் இங்கு இன்னும் வாசிக்கப்பட்டு வருகிறது. 'திருவாரூர்ப் பிறக்கமுத்தி' 'திருவாரூர் தேர் அழகு' என்ற பழமொழிகளை யாவரும் அறிவர். பழைய சோழ மன்னர்களின் தலைநகர்களில் ஒன்று. கோயில் ஐந்து வேலி (30 ஏக்கர்) குளம் (கமலாலயம்) ஐந்து வேலி என்ற, பழமொழி பெற்றது. மூன்று பிரகாரங்களும், ஏழு கோபுரங்களும் உள்ளன. வெளி மேற்குப் பிரகாரத்தில் சித்ரசபை மண்டபம் அதன் அருகே கமலாம்பிகையின் தனிக் கோயில் வடகிழக்கு மூலையில் தேவாசிரிய மண்டபம் என்ற ஆயிரங்கால் மண்டபம் இருக்கின்றன. இரண்டாம் தெற்கு பிரகாரத்தில் திருவாரூர் அரநெறி என்ற தனிப் பாடல் பெற்ற சந்நிதி இருக்கிறது. உட்பிரகாரத்திற்குச் செல்லும்போது நேரில் வன்மீகநாதர் அல்லது புற்றிடங்கொண்டார் எழுந்தருளியிருக்கிறார். அர்த்த மண்டபத்தில் சோமகுலாம்பிகை பிரியாவிடையம்மையாகக் காட்சி தருகிறார். வான்மீகிநாதர் சந்நிதி தெற்கிலுள்ள தியாகராஜசுவாமி சந்நிதி இத்தலத்துற்கு மிக்க சிறப்பை தருவது. பவனி வீதி விடங்கர் என்று தேவாரம் கூறுகிறது. இவர் நடனத்தை அசபா நடனம் என்று சொல்வர். கோவிலுக்கு மேல்புறம் கமலாலயம் என்ற முப்பது ஏக்கர் பரப்புடைய திருக்குளம் இருக்கிறது. அதன் நடுவே நடுவனநாதர் கோயில் இருக்கின்றது. கீழ வீதியில் துலாநாதனார் கோயில் என்று வழங்கும் திருவாரூர் பரவை புண்மண்டலி என்ற பாடல் பெற்ற தலம் இருக்கிறது.

இப்பதியிறைவன் பேரில் சம்பந்தர் ஆறு பக்கங்களும், அப்பர் இருபத்தொரு பக்கங்களும், சுந்தரர் எட்டு பக்கங்களும் பாடியருளியுள்ளனர். மாணிக்கவாசகர் திருவாரூரில் அருவிய திருப்புலம்பல் மூன்று பாடல்களில் இத்தலத்தைக் குறிக்கின்றார். பூந்துருத்தி காடநம்பி திருவிசைப்பாவில் 'ஆரூர் ஆதியாய் வீதிவிடங்கராய் நடம் குலவினரே என்று பாடியருளியிருக்கிறார். இன்னும் இத்தலத்தைப்பற்றிய தனிப் பாடல்களும் எண்ணில. இவ் ஊரில் அழகான திருமணமண்டபம் கட்டப் பெற்றுள்ளது. பள்ளி பிள்ளைகளுக்கு அன்னதானம் அளிக்கப்படுகின்றது. இங்கு பங்குனி உத்திரத் திருவிழா மிகவும் சிறப்பானது. அப்போதுதான் இங்குள்ள மிகப் பெரிய தேரில் தியாகராயர் உலாவருவார். தெப்பத் திருவிழாவும் சிறப்பு வாய்ந்தது.

திருவாரூரை வழிபடவிருப்பவர்கள் திருக்குவளை, திருக்காரவாசல், எட்டுக்குடி, எண்கண், திருவிளமர், திருப்பள்ளியின் முக்கூடல், திருக்கண்ண மங்கை அருகாமையில் உள்ள தலங்களையும் வழிபடலாம்.

குறிப்பு: (புகைவண்டி நிலையம்: திருவரூர் சந்திப்பு பேருந்து நிலையம்: திருவாரூர்).

## அம்பர் மாகாளம்

அம்பர் மாகாளம் கோயில் திருமாகாளம் என்று வழங்கப்படுகின்றது. இத்தலம் பூந்தோட்டம் புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கே 3 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது.

சுவாமி : மகாகாளநாதர்
அம்பிகை : ஜயன்மாதேவி.
சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.

சோமி மாறநாயனர் இத்தலத்தில் அவதரித்தவர். சுந்தரரின் தோழர். இவர் யாகம் செய்தபோது ஈசன் நீசக்கோலத்தில் எழுந்தருளி அவர் யாகம் ஏற்றருளினர். இந்த வரலாறு பெருவிழாவாக வைகாசி மாதத்தில் இத்தலத்தில் இன்னும் வெகு சிறப்பாக நடைபெறுகின்றது.

அருகில் உள்ள தலம்தான் திரு அம்பர் — சம்பந்தரால் பாடப்பெற்றது.

சுவாமி : பிரம்மபுரீசுவர்
அம்பிகை : பூங்குலம்மை. இது ஒரு மாடக்கோயில்.

குறிப்பு : திருவாரூர் மாயூரம் புகைவண்டி தொடரில் பூந்தோட்டம் புகைவண்டி நிலையத்தில் இறங்கிச் செல்லவேண்டும்.



## திருவடசாத்தானம்
## ( கோயிலூர் )


சக்ரவர்த்தி இராஜேந்திர சோழ தேவன், ஆண்டான் பிரசன்னத் தேவன் மூலம் திருப்பணிகள் செய்ததாக கல்வெட்டு கூறுகிறது. இத்தலம் திருத்துறைப் பூண்டி வட்டத்தில் முத்துப்பேட்டை புகை வண்டி நிலையத்திலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவிலிருக்கிறது. திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது. இராமர் இங்கு வழிபட்ட பின் இலங்கைக்கு அணைகட்டிய தாக ஒருகதை வழங்குகிறது. இறைவன்— மந்திரபுரீசுவரர், தேவி — பெரியநாயகியம்மை, இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் குதவன விநாயகர், மூன்று கால்களையுடைய சுரதேவர், எழில் நிறைந்த நடராசர் முதலிய மூர்த்திகள் பார்க்கத் தக்கவை. இக்கோயிலின் ஆதரவில் முத்துப்பேட்டையில் ஒரு பெண்கள் உயர் நிலைப்பள்ளி நடந்து வருகிறது.

*

# மன்னார்குடி

மன்னார்குடி வட்டத்தின் தலைமையிடம் இது இராசமன்னார்குடி என்று வழங்கப்படுகிறது. இங்குள்ள இராசகோபால்சுவாமி கோயில் மிகவும் சிறப்பு வாய்ந்தது. மன்னார்குடி மதில் அழகு என்ற பழமொழியும் உண்டு. மணவாளமாமுனிகளின் அபிமானத்தலம். பெருமான் : இராசகோபாலசுவாமி தேவி : செங்கமலத்தாயார். கோயில் பெரியது. ஐந்து பிரகாரங்கள் இருக்கின்றன. 16 கோபுரங்களிருக்கின்றன. இராசகோபுரம் 154 அடி உயரம். சந்நிதியிலுள்ள கருடகம்பம் 54 அடி உயரம். உச்சியில் கருடாழ்வார் பெருமாளைச் சேவித்தவண்ணமிருக்கிறார். கோயிலுக்குள் இருக்கும் ஆயிரங்கால் மண்டபம், வல்லாளமகாராசன் மண்டபம் இவை சிறந்தவை.

குறிப்பு : நீடாமங்கலத்திலிருந்து புகைவண்டி தொடர்புள்ளது. (புகைவண்டி நிலையம் மன்னார்குடி) தஞ்சை, திருவாரூரிலிருந்து பேருந்து வசதியுள்ளது.



# சிக்கல்

சிக்கல் என்று சம்பந்தரால் பாடல்பெற்ற தலம், நாகப்பட்டினத்திற்கு மேற்கே 5 கிலோ மீட்டர் தொலைவிலிருக்கிறது. இது ஒரு மாடக்கோயில். சுவாமி வெண்ணெயிலிங்கேசர் அல்லது நவனீதேசுவரர். அம்பிகை வேல் நெடுங்கன்னியம்மை. சிக்கல் என்றதும் சிங்காரவடிவேலர் நினைவுதான் வரும். ஐப்பசி மாதத்தில் சிங்காரவேலருக்குப் பத்து நாட்கள் திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது. ஐந்தாம் நாள் தேர்த்திருவிழா முடிந்து, வேலவர் அம்பிகையிடமிருந்து வேல் பெற்று மலைக்குச் சென்றதும் அவர் திருமேனியில் வியர்வைத்துளிகள் வெளிப்படுவது அற்புதக் காட்சி. சிக்கலில் வேல் வாங்கிச் செந்தூரில் சம்மாரம் என்ற பழமொழியுண்டு. அம்பிகையிடம் முருகன் வேல் வாங்குவது இத்தலம் ஒன்றில்தான் நடைபெறுவது. தனிச் சிறப்புடையது. அருணகிரிநாதர் இரண்டு திருப்புகழ்ப் பாடல்களைப் பாடியுள்ளார். வடக்கு வெளிப்பிரகாரத்தில் கோலவாமனப் பெருமாள் சந்நிதியிருக்கிறது. வைணவக்கோயிலும் இக்கோயிலில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

சிக்கலுக்கு அருகாமையில் உள்ள மாடக்கோயிலையுடைய கீழ்வேளூர் என்னும் பாடல்பெற்ற தலம் தரிசிக்கவேண்டியது. இங்கு சக்திவாய்ந்த அஞ்சுவட்டத்தம்மன் சந்நிதி சிறப்புடையது.

இங்கிருந்து வலிவலம், தேவூர், கீழ்வேளூர், திருக்கண்ணங்குடி ஆகிய தலங்களுக்குச் செல்லலாம்.

குறிப்பு : இவ்வூர் திருவாரூர் நாகை புகைவண்டி மார்க்கத்தில் உள்ளது. திருவாரூர் நாகையிலிருந்து பேருந்து வசதி உண்டு. நாகையிலிருந்து நகர பேருந்து வசதியும் உண்டு.

# நாகப்பட்டினம்

இந்த நகரில் பாடல் பெற்ற சிவத்தலமும், ஆழ்வார் மங்களா சாசனம் செய்த திருமால் கோயிலும் இருக்கின்றன. திருநாகைக்காரோணம் : மூவர் பாடல் பெற்றது. இறைவன் : காயாரோகணர், இறைவி : நீலாயதாட்சி. சத்தவிடங்கத்தலங்களில் ஒன்று. மூலவருக்குத் தென்புறம் தியாகராச சுவாமி எழுந்தருளியுள்ளார். விடங்கலிங்கம் கோமேதக வடிவத்திலிருக்கிறது. இங்குள்ள பஞ்சமுக வினாயகர் சிங்கத்தின் மேல் வீற்றிருக்கிறார். அருணகிரி நாதர் நான்கு திருப்புகழ்ப் பாடல்களில் இத்தலத்தைக் குறிப்பிடுகிறார். மீனவர் குலத்தினரான அதிபத்த நாயனார் இவ்வூரில் அவதரித்தவரே.

சௌந்தரராசப்பெருமாள்கோயில் : திருமங்கையாழ்வாரின் பாசுரம் பெற்றது. இறைவன் நின்ற திருக்கோலத்தில் கிழக்கே திருமுக மண்டலத்துடன் சேவை சாதிக்கிறார். தாயார் : சௌந்தரவல்லி. இவ்வூரில் சட்டையப்பர், நாகநாதர், குமரர், மலைசுவரர், கட்டியப்பர், நடுவன நாதர் முதலிய கோயில்கள் வழிபடத் தக்கவை.

இவ்வூரிலிருந்து சிக்கல், திருநள்ளாறு, நாகூர் ஆகிய தலங்களுக்குச் செல்வது எளிது.

குறிப்பு : இத்திருத்தலம் திருவாரூர் நாகூர், புகைவண்டித்தொடரில் உள்ளது.

புகைவண்டி நிலையம் : நாகப்பட்டினம்.

பேருந்து நிலையமும் உள்ளது.

# திருக்கண்ணபுரம்

பெருமாள் : சௌரிராஜன்

தாயார் : கண்ணபுரநாயகி

பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகராழ்வார், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் ஐவரும் மங்களா சாசனம் செய்துள்ளவர்கள்.

இம்மாவட்டத்திலுள்ள வைணவத் தலங்களில் இத்தலம் மிகவும் சிறப்புடையது. பெருமாளுக்கு நான்கு தேவிகளில் ஒரு தேவி மீனவர் இனத்தைச் சார்ந்தவராம். இன்றும் ஆண்டிற்கு ஒருநாள் மாசிமகத்தன்று பெருமாள் கடற்கரைக்கு எழுந்தருளுகின்றார். மீனவர்கள் சிறப்புப்பூசை நடத்துகின்றனர். இவ்வூர் தெப்பத்திருவிழா மிகவும் சிறப்புள்ளது.

பயணிகள் விடுதி உண்டு.

குறிப்பு : நன்னிலம் புகைவண்டி நிலையத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தூரம். பேருந்து வசதி உண்டு.





# திருக்குவளை

சுவாமி : கோளிலிநாதேசுவரர்

அம்பிகை : வண்டமர் பூங்குழலம்மை

மூவராலும் பாடல் பெற்ற தலம்.

சத்தவிடங்கத்தலங்களில் ஒன்று. பிரம்மன் பூசித்த தலம்.

இது தருமை ஆதீன நிர்வாகத்தில் இருக்கும் கோயிலாகும்.

இவ்வூர் அருகே குண்டையூர், வலிவலம் ஆகிய தலங்கள் உள்ளன.

குறிப்பு: இத்திருத்தலம் திருவாரூர் தலைஞாயர் பேருந்து மார்க்கத்தில் உள்ளது.

# எட்டுகுடி

திருப்புகழ் பெற்ற பிரசித்தி பெற்ற முருகன் தலம். நாகப் பட்டினத்திலிருந்தும், திருவாரூரிலிருந்தும் திருத்துறைப்பூண்டியி லிருந்தும் பஸ் வசதி உண்டு. சித்ரா பருவத்தில் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் காவடி எடுத்து முருகனுக்கு பாலாபிடேகம் செய்து பிரார்த்தனை செலுத்துவது கண்கொள்ளாக் காட்சி.

இத்திருக்கோயிலில் திருமண மண்டபம் உள்ளது. ஏராளமான திருமணங்கள் நடைபெறுகின்றது.

குறிப்பு: இத்திருத்தலம் திருவாரூர் தலைஞாயர் பேருந்து மார்க்கத்தில் உள்ளது.



## வேதாரண்யம்

மூவராலும் பாடப்பெற்ற திருமறைக்காடு என்பது. வேதங்கள் பூசித்து மூடிவிட்டுப்போயிருந்த கதவுகளை அப்பரும், சம்பந்தரும் முறையே திறக்கவும் மூடவும் செய்த அற்புதம் நிகழ்ந்த இடம். இது சப்த விடங்கத்தலங்களில் ஒன்று. புவனிவிடங்கர் என்று பெயர். சேரமான்பெருமாளும் சுந்தரரும், சென்று வழிபட்டனர். சம்பந்தர் இங்கிருந்துதான் பாண்டி நாட்டுக்கெழுந்தருளி, சமணரை வென்று சைவ சமயத்தை நிலை நாட்டினார். வேதாரணியம் விளக்கழகு, என்ற பழமொழியுண்டு. இத்தலத்திலுள்ள துர்க்கை வினாயகர் காட்சி கொடுத்த நாயனார் சந்நிதிகள் சிறப்பானவை. இக்கோயிலில் எரிந்த விளக்கை மூக்கால் தூண்டிய எலினுப்புண்ணியத்தால் மறுபிறவியில் மாவலிச்சக்கரவர்த்தியாகத் தோன்றியதை அப்பர் தேவாரத்தில் கூறியிருக்கிறார். திருவிளையாடற் புராணத்தை இயற்றிய பரஞ்சோதி முனிவர் இவ்வூரைச் சேர்ந்தவரே.

இதற்கருகிலுள்ள கோடியக்கரை, அகத்தியான் பள்ளி பார்க்க வேண்டிய இடங்கள்.

குறிப்பு : இத்திருத்தலம் திருத்துறைப்பூண்டியிலிருந்து கோடியக்கரை புகைவண்டி மற்றும் பேருந்து வண்டிகள் பாதையில் உள்ளது. புகைவண்டி நிலையம் வேதாரண்யம்.



## காரிலோ, தனி பேருந்துகளிலோ தஞ்சை மாவட்டத்திற்கு வரும் சுற்றுலா பயணிகள் கீழ்க்கண்டவாறு அவர்கள் பிரயாணங்களை வகுத்துக்கொள்ளலாம்.

தஞ்சை மாவட்டக்கோயில்கள் அனைத்தும் காலை 6 முதல் 11 வரையிலும் பிற்பகல் 5 முதல் இரவு 9 மணி வரையிலும் மட்டுமே வழிபாட்டிற்காக திறந்திருக்கும். மற்ற நேரங்களில் வழிபடல் இயலாது.

### ஆறுநாட்களில் முக்கிய தலங்களைக் கீழ்க்கண்டவாறு வழிபடலாம்.

**முதல் நாள் :** காலை : சீர்காழி, தாடாளன்கோயில், திருப்புன்கூர், வைத்தீசுவரன்கோயில்.
மாலை : திருவெண்காடு, நாங்கர், பூம்புகார், திருக்கடையூர்...இரவு மாயூரத்தில் தங்கலாம்.

**இரண்டாம் நாள் :** காலை : மாயூரம், திருஇந்தளூர், வழுவூர், தேரழுந்தூர்.
மாலை : திருவாவடுதுறை, திருவிடைமருதூர், திருப்புவனம் – கும்பகோணம்...இரவில் குடந்தையில் தங்கலாம்.

**மூன்றும் நாள் :** காலை : சுவாமிமலை, திருவலஞ்சுழி, ஒப்பிலியப்பன்கோயில், திருநாகேசுவரம்.
மாலை : நாச்சியார்கோயில், திருச்சேறை, திருக்கண்ணமங்கை, திருவாரூர், ... இரவு தங்கலாம்.

**நான்காம்நாள் :** காலை : திருவாஞ்சியம், திருப்புகலூர், திருக்கண்ணபுரம், திருச்செங்காட்டங்குடி, திருமருகல்.
மாலை : நாகை, சிக்கல், கீழ்வேளூர், வலிவலம், திருக்குவளை, எட்டிகுடி, திருவாய்மூர், இரவு திருத்துறைப்பூண்டியில் தங்கலாம்.

**ஐந்தாம்நாள் :** காலை : தில்லைவிளாகம், வேதாரண்யம், கோடிக்கரை.
மாலை : மன்னார்குடி வடுவூர், தஞ்சாவூர்—இரவில்தங்கலாம்.

**ஆறும் நாள் :** காலை : தஞ்சாவூர் (கோயில்கள், அரண்மனை, மாரியம்மன்கோயில்,) திருவையாறு.
மாலை : திருக்காட்டுப்பள்ளி, கோயிலடி, கல்லணை—இரவு திருச்சி சென்று தங்கலாம்.

**குறிப்பு :** தஞ்சை மாவட்டத்திலுள்ள எல்லா பாடல்பெற்ற சிவ, வைணவத்தலங்களையும், வழிபட விரும்புபவர்கள் மேற்கண்ட இடங்களிலேயே மேற்கொண்டும் தங்கி வழிபடலாம்.

# தஞ்சை மாவட்டத்திலுள்ள பாடல் பெற்ற சிவத்தலங்கள்

## தஞ்சை வட்டம்

| ஊர் | மாறுபட்டிருப்பின் தற்போது வழங்கும் பெயர் | இறைவன் | இறைவி | பாடியவர்கள் |
|---|---|---|---|---|
| ஆலம்பொழில் | | ஆத்மநாதேசுரர் | ஞானம்பிகை | திருநாவுக்கரசர் |
| திருவையாறு | | பஞ்சநதேசுரர் | அறம்வளர்த்த நாயகி | மூவர் பாடல் |
| திருக்கண்டியூர் | கண்டியூர் | வீரட்டானேசுரர் | மங்கள நாயகி | திருஞானசம்பந்தர்<br>திருநாவுக்கரசர் |
| திருக்காட்டுப்பள்ளி (மேல) | | தீயாடியப்பர் | வார்கொண்ட முலையம்மை | திருஞானசம்பந்தர்<br>திருநாவுக்கரசர் |
| திருகானூர் | | செம்மேனிநாதேசுரர் | சிவயோகநாயகி | திருஞானசம்பந்தர்<br>திருநாவுக்கரசர் |
| திருச்சோற்றுத்துறை | | ஓதவனேசுவரர் | அன்னபூரணி | மூவர் பாடல் |
| தென்குடி திட்டை | திட்டை | பசுபதீசுவரர் | உலகநாயகி | திருஞானசம்பந்தர் |
| திருநெய்த்தானம் | | நெய்யாடியப்பர் | பாலாம்பிகை | ,,<br>திருநாவுக்கரசர் |
| திருப்பழனம் | | ஆபத்சகாயேசுவரர் | பெரியநாயகி | திருஞானசம்பந்தர்<br>திருநாவுக்கரசர் |
| திருப்பூந்துருத்தி | | புஷ்பவனநாதேசுரர் | அழகாலமர்ந்த நாயகி | ,, |
| திருவேதிகுடி | | வேதபுரீசுவரர் | மங்கையர்க்கரசி | ,,<br>திருஞானசம்பந்தர் |

## பாபநாசம் வட்டம்

| ஊர் | மாறுபட்டிருப்பின் தற்போது வழங்கும் பெயர் | இறைவன் | இறைவி | பாடியவர்கள் | அருகாமைப் புகை வண்டி நிலையம் |
|---|---|---|---|---|---|
| அரதைப் பெரும்பாழி | அரித்துவார மங்கலம் | பாதாளேசுவரர் | அலங்கார நாயகி | திருஞானசம்பந்தர் | அம்மாபேட்டை |
| அவளிவநல்லூர் | | சாட்சிநாதர் | சௌந்தர நாயகி | ,, திருநாவுக்கரசர் | ,, |
| ஆவூர் | | பசுபதீசுவரர் | மங்கள நாயகி | திருஞானசம்பந்தர் | கும்பகோணம் |
| திருஇரும்பூளை | ஆலங்குடி | காசி ஆரணியேசுவரர் | ஏலவார்குழலியம்மை | ,, | நீடாமங்கலம் |
| திருக்கருகாவூர்க் கரைப்புத்தூர் | ஆண்டான் கோவில் | சொர்ணபுரீசுவரர் | சிவாம்பிகை | திருநாவுக்கரசர் | கும்பகோணம் |
| திருக்கருகாவூர் | | முல்லைவனேசுவரர் | கரும்பனையாளம்மை | ,, திருஞானசம்பந்தர் | பாபநாசம் |
| வடகுரங்காடுதுறை | | குலைவணங்கீசுரர் | அழகுசடைமுடியம்மை | ,, | ஐயம்பேட்டை |
| திருச்சக்கிரப்பள்ளி | | ஆலந்துறையீசுரர் | அல்லியங்கோதை | ,, | ,, |
| திருநல்லூர் | நல்லூர் | பெரியாண்டேசுரர் | திரிபுரசுந்தரியம்மை | ,, | சுந்தரபெருமாள் கோவில் |
| திருப்பாலைத்துறை | | பாலைவனநாதேசுரர் | தவளவெண்ணகையம்மை | திருநாவுக்கரசர் | பாபநாசம் |
| திருப்புள்ளமங்கை | பசுபதி கோவில் | ஆலந்தரித்தஈசுரர் | அல்லியங்கோதை | திருஞானசம்பந்தர் | பசுபதி கோவில் |



# கும்பகோணம் வட்டம்

| ஊர் | மாறுபட்டிருப்பின் தற்போது வழங்கும் பெயர் | இறைவன் | இறைவி | பாடியவர்கள் | அருகாமைப் புகை வண்டி நிலையம் |
|---|---|---|---|---|---|
| அரிசிற்கரைபுத்தூர் | அழகாபுத்தூர் | படிக்காசளித்தீசுரர் | அழகாம்பிகை | மூவர் பாடல் | கும்பகோணம் |
| திருஆப்பாடி | | பாலுகந்தஈசுரர் | பெரியநாயகி | திருநாவுக்கரசர் | ஆடுதுறை |
| திருவிடைமருதூர் | | மகாலிங்கேசுரர் | பெருநலமாமுலை நாயகி | மூவர் பாடல் | திருவிடைமருதூர் |
| இன்னம்பர் | | எழுத்தறி நாதேசுரர் | கொந்தார் பூங்குழலம்மை | திருஞானசம்பந்தர்<br>திருநாவுக்கரசர் | கும்பகோணம் |
| கஞ்சனூர் | | அக்னீசுவரர் | கற்பகநாயகி | ,, | நார்சிங்கம்பேட்டை |
| திருக்கருக்குடி | மருதாநல்லூர் | சற்குணலிங்கேசுரர் | சர்வலாங்க்ருத மின்னம்மை | திருஞானசம்பந்தர் | கும்பகோணம் |
| கருவிலி | | சற்குணநாதர் | சர்வாங்க நாயகி | திருநாவுக்கரசர் | ,, |
| திருக்கலய நல்லூர் | சாக்கோட்டை | அமிர்தகலேசுரர் | அமிர்தவல்லி | சுந்தரர் | ,, |
| திருக்குடந்தை கரோணம் | கும்பகோணம் | காசிவிசுவநாதர் | காசிவிசாலாட்சி | திருஞானசம்பந்தர் | ,, |
| திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் | ,, | நாகேசுவரர் | பெரியநாயகியம்மை | திருநாவுக்கரசர் | ,, |
| திருக்குடமுக்கு | ,, | கும்பேசுரர் | மங்களநாயகி | ,,<br>திருஞானசம்பந்தர் | ,, |
| திருத்தென்குரங்காடுதுறை | ஆடுதுறை | ஆபத்சகாயேசுரர் | பவளக்கொடியம்மை | திருநாவுக்கரசர்<br>திருஞானசம்பந்தர் | ஆடுதுறை |
| கொட்டையூர் | | கோடீசுரர் | பந்தாடு நாயகியம்மை | திருநாவுக்கரசர் | கும்பகோணம் |
| திருக்கோடிக்கா | | கோடிகாஈசுரர் | வடிவாம்பிகை | ,,<br>திருஞானசம்பந்தர் | திருவிடைமருதூர் |
| திருச்சத்திமுத்தம் | | சிவகொழுந்தீசுரர் | பெரியநாயகி | திருநாவுக்கரசர் | கும்பகோணம் |
| சிவபுரம் | | சிவபுரநாதர் | சிங்காரவல்லி | ,,<br>திருஞானசம்பந்தர் | ,, |
| திருச்சேய்ஞலூர் | | சத்யகிரீசுரர் | சகிதேவியம்மை | ,, | ,, |
| திருச்சேறை | உடையார்கோயில் | செந்நெறியப்பர் | ஞானவல்லி | ,,<br>திருநாவுக்கரசர் | ,, |

| ஊர் | மாறுபட்டிருப்பின் தற்போது வழங்கும் பெயர் | இறைவன் | இறைவி | பாடியவர்கள் | அருகாமைப் புகை வண்டி நிலயம் |
|---|---|---|---|---|---|
| திருந்துதேவன்குடி | | கர்க்கடகேசுரர் | அருமருந்தம்பொற் கொடியம்மை | திருஞானசம்பந்தர் | கும்பகோணம் |
| திருநறையூர் | | சித்தநாதர் | அழகாம்பிகை | ,,<br>சுந்தரர் | ,, |
| திருநாகேச்சுரம் | | செண்பகாரணியேசுரர் | குன்றமுலைநாயகி | மூவர் பாடல் | திருநாகேசுவரம் |
| திருநாலூர் மயானம் | நாலூர் | பலாசவனேசுரர் | பெரியாம்பிகை | திருஞானசம்பந்தர் | கும்பகோணம் |
| திருநீலக்குடி | தென்னலக்குடி | நீலகண்டேசுரர் | சிவகைங்கரிய நாயகி | திருநாவுக்கரசர் | ஆடுதுறை |
| பட்டீச்சுரம் | | தேனுபுரீசுரர் | ஞானாம்பிகை | திருஞானசம்பந்தர் | கும்பகோணம் |
| திருப்பந்தணை நல்லூர் | | பசுபதீசுவரர் | காம்பனதோளி | ,,<br>திருநாவுக்கரசர் | குத்தாலம் |
| பழையாறைவடதளி | பழையாறை | தர்மபுரீசுரர் | விமலநாயகி | ,, | கும்பகோணம் |
| திருப்பனந்தாள் | | சடையப்பேசுரர் | பெரியநாயகியம்மை | திருஞானசம்பந்தர் | ,, |
| திருப்புறம் பயம் | | சாட்சிநாதர் | கடும்பன்ன சொல்லம்மை | மூவர் பாடல் | ,, |
| பேணுபெருந்துறை | திருப்பந்துறை | சிவாநந்தேசுரர் | மலையரசியம்மை | திருஞானசம்பந்தர் | ,, |
| திருமங்கலக்குடி | | மாணிக்கவரதர் | மங்களநாயகி | ,,<br>திருநாவுக்கரசர் | ஆடுதுறை |
| திருவலஞ்சுழி | | கற்பகநாதேசுரர் | பெரியநாயகி | திருஞானசம்பந்தர்<br>திருநாவுக்கரசர் | கும்பகோணம் |
| திருவிசயமங்கை | | விசயநாதேசுரர் | மங்கைநாயகி | திருஞானசம்பந்தர்<br>திருநாவுக்கரசர் | ,, |
| திருவியலூர் | | யோகாநந்தேசுரர் | சௌந்தரநாயகி | திருஞானசம்பந்தர் | ,, |
| வைகண்மாடக் கோயில் | வைகல் | வைகணுதேசுரர் | வைகலாம்பிகை | ,, | ஆடுதுறை |
| திருவைகாவூர் | | வில்வநேசுரர் | வளைக்கைநாயகி | ,, | கும்பகோணம் |

## மாயூரம் வட்டம்

| ஊர் | மாறுபட்டிருப்பின் தற்போது வழங்கும் பெயர் | இறைவன் | இறைவி | பாடியவர்கள் | அருகாமைப் புகை வண்டி நிலையம் |
|---|---|---|---|---|---|
| திருஅழுந்தூர் | தேரழுந்தூர் | வேதபுரீசுவரர் | சௌந்தரநாயகி | திருஞானசம்பந்தர் | மாயூரம் |
| திருஅன்னியூர் | பொன்னூர் | ஆபத்சகாயேசுரர் | பெரியநாயகி | திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் | ,, |
| திருஆக்கூர் | | தான்தோன்றியப்பர் | வாளொடுங் கண்ணியம்மை | திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் | ,, |
| திருவாவடுதுறை | | மாசிலாமணீசுரர் | ஒப்பிலாமுலையம்மை | மூவர் பாடல் | நார்சிங்கம் பேட்டை |
| எதிர்கொள்பாடி (மேல) | மேல திருமணஞ்சேரி | ஐராவதேசுவரர் | மலர்க்குழல் மாதம்மை | சுந்தரர் | குத்தாலம் |
| திருக்கடவூர் | திருக்கடையூர் | அமிர்தகடேசுரர் | அபிராமி | மூவர் பாடல் | மாயூரம் |
| திருக்கடவூர் மயானம் | | பிரம்மபுரீசுவரர் | மலர்க்குழல் மின்னம்மை | ,, | ,, |
| திருக்கடைமுடி | கீழையூர் | கடைமுடிநாதே [சுரர் | அபிராமியம்மை | திருஞானசம்பந்தர் | ,, |
| திருக்கண்ணார் கோயில் | குறுமானக்குடி | கண்ணாயிரமுடையார் | முருகுவளர் கோதை | ,, | வைத்தீசுவரன் கோயில் |
| கருப்பறியலூர் | தலைஞாயிறு | குற்றம்பொறுத்த நாதேசுரர் | கோல்வளையம்மை | திருஞானசம்பந்தர் சுந்தரர் | ,, |
| திருக்குரக்குக்கா | | குந்தளேசுரர் | குந்தளநாயகி | திருநாவுக்கரசர் | ,, |
| திருக்குறுக்கை | | வீரட்டேசுரர் | ஞானாம்பிகை | ,, | மாயூரம் |
| திருக்கோழம்பம் | திருக்கொளம்பயம் | கோகிலேசுரர் | சௌந்தரநாயகி | ,, திருஞானசம்பந்தர் | நார்சிங்கம் பேட்டை |
| திருச்செம்பொன் பள்ளி | செம்பனார்கோயில் | சொர்ணபுரீசுரர் | மருவார்குழலி | திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் | மாயூரம் |

| ஊர் | மாறுபட்டிருப்பின் தற்போது வழங்கும் பெயர் | இறைவன் | இறைவி | பாடியவர்கள் | அருகாமைப் புகை வண்டி நிலையம் |
|---|---|---|---|---|---|
| திருத்தலைச்சங்காடு | | சங்கருணாதேசுரர | சௌந்தரநாயகி | திருஞானசம்பந்தர் | மாயூரம் |
| திருத்துருத்தி | குத்தாலம் | உக்தவேதீசுவரர் | முகிழாம்பிகை | மூவர் பாடல் | குத்தாலம் |
| திருநல்லம் | கோனேரிராஜபுரம் | உமாமகேசுரர் | மங்களநாயகி | திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் | ஆடுதுறை |
| திருநனிப்பள்ளி | புஞ்சை | நற்றுணையப்பர் | பர்வதராஜபுத்திரி | மூவர் பாடல் | மாயூரம் |
| திருநின்றியூர் | | மகாலட்சுமீசுரர் | உலகநாயகி | ,, | ,, |
| திருநீடூர் | | சோமநாதர் | வேயுறுதோளியம்மை | சுந்தரர் | நீடூர் |
| திருப்பறியலூர் | பரசலூர் | வீரட்டேசுரர் | இளங்கொடியம்மை | திருஞானசம்பந்தர் | மாயூரம் |
| திருமணஞ்சேரி | | அருள்வள்ளநாதர் | யாழின்மொழியம்மை | திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் | குத்தாலம் |
| மண்ணிப்படிக்கரை | இலுப்பப்பட்டு | நீலகண்டேசுவரர் | அமிர்தகர வல்லியம்மை | சுந்தரர் | மாயூரம் |
| மயிலாடுதுறை | மாயூரம் | மாயூரநாதர் | அபயாம்பிகை | திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் | ,, |
| திருவலம்புரம் | | வலம்புரிநாதர் | வடுவகிர்க் கண்ணம்மை | மூவர் பாடல் | ,, |
| திருவாளொளிப் புற்றூர் | திருவாளப்புத்தூர் | மாணிக்க வண்ணேசுவரர் | வண்டார்மங் குழலம்மை | திருஞானசம்பந்தர் சுந்தரர் | ,, |
| விளநகர் | | துறைகாட்டும் வள்ளலார் | வேயுறு தோளியம்மை | திருஞானசம்பந்தர் | ,, |
| திருவேள்விக்குடி | | கல்யாணசுந்தரர் | பரிமளசுகந்த நாயகி | ,, சுந்தரர் | ,, |

## நன்னிலம் வட்டம்

| ஊர் | மாறுபட்டிருப்பின் தற்போது வழங்கும் பெயர் | இறைவன் | இறைவி | பாடியவர்கள் | அருகாமைப் புகை வண்டி நிலையம் |
|---|---|---|---|---|---|
| திருஅம்பர்ப் பெருந் திருக்கோயில் | அம்பல் | பிரம்மபுரீசுவரர் | பூங்குழலம்மை | திருஞானசம்பந்தர் | பூந்தோட்டம் |
| திருஅம்பர் மாகாளம் | கோயில் திரு மாகாளம் | மகாகாளநாதர் | பட்சநாயகி | ,, | ,, |
| இராமணதீச்சுரம் | இராமநந்தீசுரம் | இராமநாதேசுரர் | கருவார் குழலியம்மை | ,, | நன்னிலம் |
| கரவீரம் | | கரவீரேசுவரர் | பிரத்யட்டை மின்னம்மை | ,, | திருவாரூர் |
| திருக்குடவாயில் | | கோனேசுவரர் | பெரியநாயகி | ,, | ,, |
| திருக்கொண்டீச்சரம் | | பசுபதீசுவரர் | சாந்தநாயகி | திருநாவுக்கரசர் | நன்னிலம் |
| திருக்கொளம்புதூர் | | வல்வவனேசுவரர் | சௌந்திர நாயகி | திருஞானசம்பந்தர் | திருவாரூர் |
| திருக்கோட்டாறு | திருக்கொட்டாரம் | ஐராவதீசுவரர் | வண்டமர் பூங்குழலியம்மை | ,, | கொல்லுமாங்குடி |
| சாத்தமங்கை | சீயாத்தமங்கை | அயவந்தீசுவரர் | மலர்க் கண்ணம்மை | ,, | நன்னிலம் |
| சிறுகுடி | | மங்களேசுவரர் | மங்கள நாயகி | ,, | பேரளம் |
| திருச்சங்காட்டாங்குடி | | உத்ராபதீசுவரர் | திருக்குழல் நாயகியம்மை | ,, திருநாவுக்கரசர் | நன்னிலம் கொரடாச்சேரி |
| திருத்தலையாலங்காடு | | பாடவல்ல ஈசுவரர் | திருமடந்தை அம்மை | ,, | |
| திலதைப்பதி | திலதர்ப்பணப்புரி | முக்தீசுவரர் | பொற்குடியம்பை | திருஞானசம்பந்தர் | பூந்தோட்டம் |
| நன்னிலம் | | மதுவனேசுவரர் | மதுவனநாயகி | சுந்தரர் | நன்னிலம் |

| ஊர் | மாறுபட்டிருப்பின் தற்போது வழங்கும் பெயர் | இறைவன் | இறைவி | பாடியவர்கள் | அருகாமைப் புகை வண்டி நிலையம் |
|---|---|---|---|---|---|
| திருப்பயற்றூர் | திருப்பயத்தங்குடி | திருபயற்றீசுவரர் | காவியங்கண்ணி | திருநாவுக்கரசர் | திருவாரூர் |
| திருப்பள்ளியின் முக்கூடல் | | முக்கோணநாதர் | மையும் மேவு கண்ணி | ,, | ,, |
| திருப்பனையூர் | | சௌந்தரிய நாயகர் | பெரியநாயகி அம்மை | திருஞானசம்பந்தர் சுந்தரர் | விசலூர் |
| திருப்பாம்புரம் | | பாம்புரேசுவரர் | வண்டார் பூங்குழலியம்மை | திருஞானசம்பந்தர் | பேரளம் |
| திருப்புகலூர் | | அக்னீசுவரர் | கருந்தார் குழலியம்மை | மூவர் பாடல் | நன்னிலம் |
| திருப்புகலூர் | வர்த்தமானீச்சரம் | வர்த்தமானீசுவரர் | கருந்தார் குழலியம்மை | திருஞானசம்பந்தர் | நன்னிலம் |
| பெருவேளூர் | அய்யம்பேட்டை | பிரியாஈசுவரர் | மின் அனையாளம்மை | திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் | திருவாரூர் |
| திருமருகல் | | மாணிக்க வண்ணேசுவரர் | வண்டுவார் குழலம்மை | திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் | நன்னிலம் |
| திருமெய்ச்சூர் | | மேகநாதர் | சௌந்திர நாயகி | திருஞானசம்பந்தர் | பேரளம் |
| திருமெய்ச்சூர் | இளங்கோயில் | சகலபுவனேசுவரர் | மேகலாம்பிகை | திருநாவுக்கரசர் | ,, |
| திருவன்னியூர் | | அக்னேசுவரர் | பார்வதியம்மை | ,, | பூந்தோட்டம் |
| திருவாஞ்சியம் | | வாஞ்சிநாதர் | மங்கள நாயகி | மூவர் பாடல் | நன்னிலம் |
| திருவிற்குடி | | வீரட்டானேசுவரர் | மைவார் குழலியம்மை | திருஞானசம்பந்தர் | விற்குடி |
| திருவீழிமழலை | | நேத்திரார் பணேசுவரர் | சுந்தர குஜாம்பிகை | மூவர் பாடல் | பூந்தோட்டம் |

## சீர்காழி வட்டம்

| ஊர் | மாறுபட்டிருப்பின் தற்போதுள்ள பெயர் | இறைவன் | இறைவி | பாடியவர்கள் | அருகாமையிலுள்ள புகைவண்டி நிலையம் |
|---|---|---|---|---|---|
| கலிக்காமூர் | அன்னப்பன் பேட்டை | சுந்தரேசுவரர் | அழகுவனமுலையம்மை | சுந்தரர் | சீர்காழி |
| கீழைத்திருக்காட்டுப் பள்ளி | ஆரணியேசுவரர் கோயில் | ஆரணியசுந்தரர் | அகிலாண்ட நாயகி | சுந்தரர் | சீர்காழி |
| காவிரிப்பூம்பட்டினம் | | பல்லவனேசுவரர் | சௌந்திர நாயகி | திருஞானசம்பந்தர் | மாயூரம் |
| காழி | சீர்காழி | பிரும்மபுரீசுவரர் | திருமலைநாயகி | மூவர் | சீர்காழி |
| திருக்குருகாவூர் | திருக்கடாவூர் | வெள்ளடை நாதர் | காவியங்கன்னியம்மை | திருஞானசம்பந்தர் சுந்தரர் | சீர்காழி |
| திருக்கோலக்கா | திருத்தாளமுடையார் கோயில் | சத்தபுரீசுரர் | ஓசைகொடுத்த நாயகி | திருஞானசம்பந்தர் சுத்தரர் | சீர்காழி |
| திருச்சாயக்காடு | சாயாவனம் | சாயாவனேசுவரர் | குயிலினு நன்மொழியம்மை | திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் | மாயூரம் |
| திருநல்லூர்ப் பெருமணம் | ஆச்சான்புரம் | சிவலோக தியாகேசர் | நங்கையுமையம்மை | திருஞானசம்பந்தர் | கொள்ளிடம் |
| புள்ளிருக்குவேளூர் | வைத்தீஸ்வரன் கோயில் | வைதியநாதேஸ்வரர் | தையல்நாயகி | திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் | வைத்தீஸ்வரன் கோயில் |
| திருப்புன்கூர் | | சிவலோகநாதர் | சொக்கநாயகி அம்மை | மூவர் | வைத்தீஸ்வரன் கோயில் |
| திருமகேந்திரபள்ளி | | திருமேனியழகர் | வடிவாம்பிகை | திருஞானசம்பந்தர் | கொள்ளிடம் |
| தென்திருமுல்லைவாயில் | | முல்லைவனநாதர் | கோதையம்மை | திருஞானசம்பந்தர் | சீர்காழி |
| திருவெண்காடு | | சுவேதாரண்யேசுவரர் | பிரும்மவித்யா நாயகி | மூவர் | சீர்காழி |

## மன்னார்குடி வட்டம்

| ஊர் | மாறுபட்டிருப்பின் தற்போதுள்ள பெயர் | இறைவன் | இறைவி | பாடியவர்கள் | அருகாமையிலுள்ள புகைவண்டி நிலையம் |
|---|---|---|---|---|---|
| திருக்களர் | | பாரிசாதவனேசுவரர் | அழகேசுவரியம்மை | திருஞானசம்பந்தர் | திருத்துறைப்பூண்டி |
| திருக்கொள்ளிக்காடு | | அக்னீசுவரர் | பஞ்சினும் மெல்லடியம்மை | திருஞானசம்பந்தர் | திருநெல்லிக்காவல் |
| கோட்டூர் | | கொழுந்நீசுவரர் | மதுரவசனாம்பிகை | திருஞானசம்பந்தர் | மன்னார்குடி |
| திருநாட்டியத்தான்குடி | | ரெத்தினகிரீசுவரர் | மலைமங்கையம்மை | சுந்தரர் | மாவூர் ரோடு |
| திருநெல்லிக்கா | | நெல்லிவனநாதர் | மங்களநாயகி | திருஞானசம்பந்தர் | திருநெல்லிக்காவல் |
| திருபாதானேசுவரம் | பாமணி | நாகநாதர் | அமிர்தநாயகி | திருஞானசம்பந்தர் | மன்னார்குடி |
| பூவனூர் | | புஷ்பவனேசுவரர் | கற்பகவல்லி | திருநாவுக்கரசர் | நீடாமங்கலம் |
| திருப்பேரயில் - | ஓகைபேரையூர் | ஜெகதீசுவரர் | ஜெகன்நாயகி | திருநாவுக்கரசர் | குளிக்கரை |
| திருவிடைவாய் | | விடைவாய் அப்பர் | உமையம்மை | திருஞானசம்பந்தர் | கொரடாச்சேரி |
| திருவண்டுதுறை | | வெண்டுறைநாதேசுவரர் | நெடுங்கண்ணியம்மை | திருஞானசம்பந்தர் | மன்னார்குடி |
| திருவெண்ணி - | கோயில்வெண்ணி | வெண்ணிக்கரும்பர் | அழகியநாயகி | திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் | கோயில்வெண்ணி |

## ஒரத்தநாடு வட்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திருப்பதிரிநியமம் | பருத்தியப்பர் கோயில் | பருதியப்பர் | மங்களநாயகி | திருஞான\|சம்பந்தர் | சாலியமங்கலம் |

## புதுச்சேரி மாவட்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தருமபுரம் | | யாழ்மூரிநாதர் | தேனமுர்தவல்லி | திருஞானசம்பந்தர் | காரைக்கால் |
| திருத்தெளிச்சேரி | | பார்வதீசுவரர் | சத்தியம்மை | திருஞானசம்பந்தர் | காரைக்கால் |
| திருநள்ளாறு | | தர்ப்பாரண்யீசுவரர் | போகமர்த்தமுலையம்மை | மூவர் பாடல் | காரைக்கால் |
| திருவேட்டகுடி | | திருமேனியழகப | சாந்தநாயகி | திருஞானசம்பந்தர் | காரைக்கால் |

## நாகப்பட்டினம் வட்டம்

| ஊர் | மாறுபட்டிருப்பின் தற்போது வழங்கும் பெயர் | இறைவன் | இறைவி | பாடியவர்கள் | அருகாமைப் புகை வண்டி நிலையம் |
|---|---|---|---|---|---|
| திரு ஆரூர் | | வன்மீகநாதர் | அல்லியங்கோதை | மூவர் | திருவாரூர் |
| திரு ஆரூர் | அரநெறி | அறநெறியப்பர் | வண்டார்குழலி | திருநாவுக்கரசர் | ,, |
| திரு ஆரூர் | பறவையுண் மண்டனி | தூவாயநாதர் | பஞ்சின்மெல்லடி அம்மை | சுந்தரர் | ,, |
| கன்றுப்பூர் | கோயில் கண்ணுப்பூர் | நடுத்தெறியப்பர் | மாதுமையம்மை | திருநாவுக்கரசர் | ,, |
| திருக்காருயில் | திருக்காரவாசல் | கண்ணாயிரநாதர் | கைலாயநாயகி | திருஞானசம்பந்தர் | ,, |
| கீழ்வேளூர் | | கேடிலியப்பர் | வனமுலைநாயகி | திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் | கீவளூர் |
| திருக்கோளிலி | திருக்குவளை | கோளலிநாதர் | வண்டமர்பூங்குழலம்மை | மூவர் | திருவாரூர் |
| சிக்கல் | | வெண்ணெய்லிங்கேசுவரர் | வேனெடுங்கண்ணியம்மை | திருஞானசம்பந்தர் | சிக்கல் |
| தேவூர் | | தேவபுரீசுவரர் | பண்ணிலாவியமொழியுமை | ,, | கீவளூர் |
| திருநாகைக்காரோணம் | நாகப்பட்டினம் | காயாரோகணேசுவரர் | நீலாயுதாட்சி அம்மை | மூவர் | நாகப்பட்டினம் |
| வலிவலம் | | மனத்துணைநாதர் | மாழையங்கண்ணியம்மை | ,, | கீவளூர் |
| திருவாய்மூர் | | வாய்மூர்நாதேசுவரர் | பாலினுநன்மொழியம்மை | திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் | நாகப்பட்டினம் |
| திருவிளமர் | விளமல் | பதஞ்சலிமனோகர் | யாழினும்மென்மொழியாள் | திருஞானசம்பந்தர் | திருவாரூர் |


## திருத்துறைப்பூண்டி வட்டம்

| ஊர் | மாறுபட்டிருப்பின் தற்போது வழங்கும் பெயர் | இறைவன் | இறைவி | பாடியவர்கள் | அருகாமைப் புகை வண்டி நிலையம் |
|---|---|---|---|---|---|
| அகத்தியான்பள்ளி | | அகத்தீசுரர் | பாகம்பிரியா நாயகி | திருஞானசம்பந்தர் | அகத்தியான்பள்ளி |
| திருஇடும்பாவனம் | | சற்குண நாதர் | மங்கள நாயகி | ,, | திருத்துறைப் பூண்டி |
| திருஉச்சாதனம் | கோவிலூர் | மந்திரபுரீசுவரர் | பெரிய நாயகி அம்மை | ,, | முத்துப்பேட்டை |
| திருக்கடிக்குளம் | | கற்பக நாதர் | சௌந்திர நாயகி | ,, | திருத்துறைப் பூண்டி |
| திருக்கைச்சின்னம் | கச்சனம் | கைச்சின நாதர் | வெள்வளையம்மை | ,, | திருவாரூர் |
| திருக்கோடி | குழகர்கோயில் | அமிர்தகடேசுவரர் | மையார் தடங் கண்ணி | சுந்தரர் | கோடியக்கரை |
| திருச்சிற்றேமம் | சித்தாய்மூர் | பொன்வைத்த நாதர் | அகிலாண்ட நாயகி | திருஞானசம்பந்தர் | ஆலத்தம்பாடி |
| திருத்தண்டலைநீணெறி | தண்டலச்சேரி | நீணெறிநாதர் | ஞானம்பிகை | ,, | திருத்துறைப் பூண்டி |
| திருத்தேங்கூர் | | வெள்ளிமலை நாதர் | பெரிய நாயகி | ,, | திருநெல்லிக்காவல் |
| திருமறைக்காடு | வேதாரண்யம் | வேதாரண்யேசுவரர் | யாழைப்பழித்த மொழியம்மை | மூவர் | வேதாரண்யம் |

## தஞ்சை மாவட்ட வைணவத் திருத்தலங்கள் விவரம் (மங்களாசாசனங்கள் பெற்றவை)

| ஊர் | திருப்பெயர் | | மங்களாசாசனம் செய்த ஆழ்வார் | புகைவண்டி நிலையம் |
|---|---|---|---|---|
| தஞ்சை | நீலமேகன் | செங்கமலவல்லித் தாயார் | பூதத்தாழ்வார், திருமங்கையாழ்வார் | தஞ்சாவூர் |
| தஞ்சை | சிங்கப்பெருமான் | தஞ்சை நாயகி ,, | திருமங்கை ஆழ்வார் | தஞ்சாவூர் |
| கண்டியூர் | கமலநாதன் | கமலவல்லித் தாயார் | திருமங்கை ஆழ்வார் | தஞ்சாவூர் |
| திருப்பேர் நகர் (கோயிலடி) | அப்பகுடத்தான் | கமலவல்லித் தாயார் | திருமழிசை ஆழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார் (பஞ்சரங்களில் ஒன்று) | தஞ்சாவூர் & பூதலூர் |
| ஆதனூர் | ஆண்டளக்குமையன் | ரெங்கநாயகித்தாயார் | திருமங்கை ஆழ்வார் | சுவாமிமலை |
| கடலூர் | வையம் காத்த பெருமாள் | பதுமாகினித் தாயார் | திருமங்கை ஆழ்வார் | அய்யம்பேட்டை |
| திருக்குடந்தை | ஆராவமுதன் (சாரங்கபாணி) | கோமளவல்லித் தாயார் | பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசை ஆழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கை ஆழ்வார் (பஞ்சரங்களில் ஒன்று) | கும்பகோணம் |
| புள்ளம்பதங்குடி | வல்வில்ராமன் | பொற்றாமரையாள் ,, | திருமங்கை ஆழ்வார் | சுவாமிமலை |
| திருவிண்ணகரம் (ஒப்பிலியப்பன் கோயில்) | ஒப்பிலியப்பன் | பூமிதேவித் தாயார் | பேயாழ்வார், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் | திருநாகேசுவரம் (கும்பகோணம்) |
| நாச்சியார் கோயில் | நின்றநம்பிசீனிவாசன் | நம்பிக்கை நாச்சியார் | திருமங்கை ஆழ்வார் | கும்பகோணம் |
| திருச்சேறை | சாரநாதன் | சாரநாயகித் தாயார் | திருமங்கை ஆழ்வார் | கும்பகோணம் |
| திருவள்ளிங்குடி | கோலவல்லிராமன் | மரகதவல்லித் தாயார் | திருமங்கை ஆழ்வார் | திருவிடமருதூர் |
| நாதன்கோயில் (நந்திவிண்ணகரம்) | விண்ணகரப் பெருமாள் | சண்பகவல்லி தாயார் | திருமங்கை ஆழ்வார் | கும்பகோணம் |
| கவித்தலம் | ஆற்றங்கரை கிடைக்கும் கண்ணன் | பொற்றாமரையாள் தாயார் | திருமழிசை ஆழ்வார் | பாபநாசம் |
| தேரழுந்தூர் | ஆமருவியப்பன் | செங்கமலவல்லித் தாயார் | திருமங்கை ஆழ்வார் (கம்பன் பிறந்த ஊர்) | குத்தாலம் |
| திருஇந்தளூர் | பரிமளரெங்கன் | புண்டரீகவல்லித் தாயார் | திருமங்கை ஆழ்வார் (பஞ்சரங்கங்களில் ஒன்று) | மாயூரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| சீர்காழி (சீராம விண்ணகரம்) | தாடாளப் பெருமாள் | உலகநாயகித் தாயார் | திருமங்கை ஆழ்வார் | சீர்காழி |
| திருவாலி-திருநகரி | வயலாளிமணவாளன் | ஆமுதகடவல்லித் தாயார் | திருமங்கையாழ்வார் (இத்திருத் தலத்தருகே அவதரித்தார்) | சீர்காழி |
| திருநாங்கூர் (மணிமாடக் கோயில்) | நந்தாவிளக்குப் பெருமாள் | புண்டரீகவல்லி ,, | திருமங்கையாழ்வார் | ஷை |
| வைகுந்த விண்ணகரம் | வைகுந்தநாதன் | வைகுந்தவல்லித் தாயார் | ஷை | ஷை |
| அரிமேயவிண்ணகரம் | குடமாடுகூத்தன் | அமிருதகடவல்லித் தாயார் | ஷை | ஷை |
| திருத்தேவனூர் தொகை | தெய்வநாயகப் பெருமான் | கடல்மகள் நாச்சியார் | ஷை | ஷை |
| திருவண் புருடோத்தமம் | புருடோத்தமன் | புருடோத்தமநாயகி | ஷை | ஷை |
| செம்பொன்செய் கோயில் | செம்பொன் ரங்கநாதன் | அல்லிமாமலர் நாச்சியார் | ஷை | ஷை |
| திருத்தெற்றியம்பலம் | செங்கண்மால் | செங்கமலவல்லி | ஷை | ஷை |
| திருமணிக்கூடம் | மணிக்கூட நாயகன் | திருமாமகள் நாச்சியார் | ஷை | ஷை |
| திருக்காவளம்பாடி | கோபாலகிருஷ்ணன் | மடவரல் மங்கை | ஷை | வைத்தீசுவரன் |
| அண்ணன்கோயில் | நாராயணன் | பூவார் திருமகள் நாச்சியார் | ஷை | சீர்காழி [கோயில |
| பார்த்தன்பள்ளி | தாமரையாள் கேள்வன் | தாமரை நாயகி | ஷை | ஷை |
| தலைச்சங்காடு | நான்மதியப்பெருமான் | தலைச்சங்க நாச்சியார் | ஷை | ஆக்கூர் |
| சிறுபுலியூர் | கிருபாசமுத்திரப் பெருமாள் | திருமாமகள் நாச்சியார் | ஷை | கொல்லுமாங்குடி |
| திருக்கண்ணபுரம் | சௌரிராஜன் | கண்ணபுர நாயகி | நம்மாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கை ஆழ்வார் | நன்னிலம் |
| திரு ண்ணண்ணபுரம் | லோகநாதன் | லோகநாயகி | திருமங்கையாழ்வார் | கீழ்வேளூர் (கீவளூர்) |
| திருக்கண்ணமங்கை | பக்தவத்சலன் | அபிடேகவல்லி | ஷை | திருவாரூர் |
| நாகப்பட்டினம் | சௌந்தரராஜன் | சௌந்தர்யவல்லி | ஷை | நாகப்பட்டினம் |



## சிறப்பான அம்பிகை சந்நிதிகள்

| ஊர் | அம்பிகை திருநாமங்கள் |
|---|---|
| திருவாரூர் | கமலாம்பிகை |
| திருவையாறு | அறம் வளர்த்த நாயகி |
| கும்பகோணம் | மங்களாம்பிகை |
| நாகை | நீலாயுதாட்சி அம்மை |
| வைத்தீசுவரன் கோயில் | தையல்நாயகி |
| வேதாரண்யம் | யாழைப்பழித்த மொழியம்மை |
| திருக்கடையூர் | அபிராமியம்மன் |
| மாயூரம் | அவயாம்பிகை |

## மாடக்கோயில்கள்

(கட்டு மலை மேலுள்ளவை)

- அம்பர்
- ஆக்கூர்
- கீழ்வேளூர்
- குடவாயில்
- சிக்கல்
- தலைச்சங்காடு
- நல்லூர்
- நன்னிலம்
- பழையாறைவடதளி
- வலிவலம்
- வைகன்மாடக்கோயில்

## ஆதிசேடன் பூசித்த தலங்கள்

- கும்பகோணம் — நாகேசுவரர் கோயில்
- திருப்பாம்புரம்
- திருநாகேச்சுரம்
- நாகப்பட்டினம்

## மேற்கு பார்த்த சந்நிதிகள்

- அழகாதிரிபுத்தூர்
- தேரழுந்தூர்
- திருஆலம்பொழில்
- திருக்கடவூர்
- திருக்கடவூர் மயானம்
- திருக்கடைமுடி
- கண்டியூர்
- கீழ்திருக்காட்டுப்பள்ளி
- குடந்தைக்காசிவிசுவநாதர்
- குடவாயில்
- திருக்கொள்ளிக்காடு
- கோட்டூர்
- சியாத்தமங்கை
- குத்தாலம்
- திருநல்லம் (கோனேரிராஜபுரம்)
- திருநறையூர் சித்தீச்சுரம்
- திருநல்லிக்கா
- பரசலூர்
- திருப்பனந்தாள்
- வைத்தீசுவரன் கோயில்
- திருவிற்குடி

## நவகிரகங்களின் பிரதான தலங்கள்

சூரியன் - சூரியனார்கோயில்
சனி - திருநள்ளாறு
செவ்வாய் - வைத்தீசுவரன் கோயில்
சந்திரன் - திருவாரூர்
ராகு - திருநாகேசுவரம்
கேது - நாகநாதன் கோயில்
சுக்கிரன் - கஞ்சனூர்
புதன் - திருவெண்காடு
குரு - ஆலங்குடி

## அட்ட வீரட்ட தலங்கள்

திருக்கண்டியூர் திருவிற்குடி
திருப்பறியலூர் திருவழுவூர்
திருக்குறுக்கை திருக்கடவூர்

ஆகிய தலங்கள் தஞ்சை மாவட்டத்தில் உள்ளன.

திருக்கோயிலூர் திருவதிகை

தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ளன.

## மயானங்கள்

கடவூர் மயானம்
நாலூர் மயானம்

## ஏழூர் தலங்கள்

திருவையாறு
திருப்பழனம்
திருச்சோற்றுத்துறை
திருவேதிக்குடி
திருப்பந்துருத்தி
திருக்கண்டியூர்
திருநெய்த்தானம்

## காசிக்கு ஈடான தலங்கள்

திருவெண்காடு
திருவையாறு
மாயூரம்
திருவிடைமருதூர்
திருச்சாய்க்காடு
திருவாஞ்சியம்

## பஞ்ச பூத தலங்கள்

தஞ்சை மாவட்டம்
திருவாரூர் - பிருதிவித்தலம்

மற்ற மாவட்டங்களில் உள்ள இதர நான்கு தலங்களாவன

திருவானைக்கா - அப்பு
திருவண்ணாமலை - தேயு
திருக்காளத்தி - வாயு
சிதம்பரம் - ஆகாயம்

## சத்த விடங்கத் தலங்கள்

| தலம் | விடங்கர் | நடனம் |
|---|---|---|
| திருவாரூர் | வீதிவிடங்கர் | அசபா நடனம் |
| திருநள்ளாறு | நாகவிடங்கர் | உன்மத்த நடனம் |
| திருநாகை | சுந்தரவிடங்கர் | பாராவாரதரங்க நடனம் |
| திருக்காரவாசல் | ஆதிவிடங்கர் | குக்குட நடனம் |
| திருக்குவளை | அவனிவிடங்கர் | பிருங்க நடனம் |
| திருமறைக்காடு | புவனிவிடங்கர் | அம்சபாத நடனம் |
| திருவாய்மூர் | நீலவிடங்கர் | கமல நடனம் |

## முருகன் தலங்கள்

திருமைலாடி, திருவிடைக்கழி, கோயில் கந்தன்குடி, எண்கண், கூந்தலூர், வைத்தீசுவரன் கோயில், பெரம்பூர், சிக்கல், எட்டிகுடி, நாகை, குமரர்கோயில், சுவாமிமலை.

## தனிக் கோயில்கள்

சரசுவதி — கூத்தனூர்
சூரியன் — சூரியனார் கோயில்
பிரம்மன் — திருக்கண்டியூர்
பைரவர் — திருவலஞ்சுழி, தகட்டூர்

## ஆழ்வார்கள் அவதரித்த ஊர்

திருமங்கையாழ்வார்
—குறையலூர்

தொண்டரடிபொடியாழ்வார்
—திருமண்டலகுடி

## தஞ்சை மாவட்டத்தில் அவதரித்த நாயன்மார்கள்

| நாயன்மார் பெயர் | அவதரித்த தலம் | நாயன்மார் பெயர் | அவதரித்த தலம் |
|---|---|---|---|
| அதிபத்த நாயனார் | நாகை | கோட்புலி நாயனார் | திருநாட்டியத்தான்குடி |
| அப்பூதி அடிகள் | திங்களூர் | சண்டேசுவர நாயனார் | திருச்சேய்ஞலூர் |
| அமர்நீதி நாயனார் | பழையாறை | சிறுப்புலி நாயனார் | ஆக்கூர் |
| அரிவட்டா நாயனார் | கணமங்கலம் | சிறுதொண்ட நாயனார் | திருச்செங்காட்டங்குடி |
| இசைஞானியார் | திருவாரூர் | செருத்துணை நாயனார் | தஞ்சாவூர் |
| இயற்பகை நாயனார் | பூம்புகார் | சோமாசிமார நாயனார் | கோயில் திருமாகாளம் |
| உருத்ரபசுபதி நாயனார் | திருத்தலையூர் | தண்டியடிகள் நாயனார் | திருவாரூர் |
| ஏயர்கோன்கலிக்காம நாயனார் | திருப்பெருமங்கலம் | திருஞானசம்பந்தர் | சீர்காழி |
| | | திருநாளைப்போவார் (நந்தனார்) | திருப்பங்கூர் |
| ஏனாதி நாயனார் | ஏயினனூர் | திருநீலநக்க நாயனார் | சீயாத்தமங்கை |
| கணநாத நாயனார் | சீர்காழி | திருமூல நாயனார் | சாத்தனூர் |
| காரி நாயனார் | திருக்கடவூர் | நமிநந்தி அடிகள் | ஏமப்பேருள் |
| காரைக்காலம்மையார் | காரைக்கால் (புதுவை மாவட்டம்) | நேசநாயனார் | கூறைநாடு |
| | | மானக்கஞ்சார நாயனார் | ஆனைதாண்டவபுரம் |
| குங்கிலிய கலய நாயனார் | திருக்கடவூர் | முருக நாயனார் | திருப்புகலூர் |
| குலச்சிறை நாயனார் | மணமேற்குடி | முனையடுவார் | நீடூர் |

47

## அறநிலயங்களில் நிர்வாகத்தில் இருந்துவரும் ஓய்வு விடுதிகள், திருமண மண்டபங்கள், உயர்நிலைப் பள்ளிகள், அன்பு இல்லங்கள், மருத்துவ நிலையங்கள்

### ஓய்வு விடுதிகள்

சீர்காழி, வைத்தீசுவரன் கோயில், மாயூரம், திருக்கடையூர், திருநள்ளாறு, திருவெண்காடு, சிக்கல், திருவாரூர், திருப்புகலூர், திருக்கண்ணபுரம், திருவாஞ்சியம், திருவாய்மூர், சுவாமிமலை, திருவிடைமருதூர், நாச்சியார் கோயில், திருபுவனம், திருவையாறு.

### திருமண மண்டபங்கள்

தஞ்சாவூர், சுவாமிமலை, மன்னார்குடி, நீடாமங்கலம், திருத்துறைப்பூண்டி, நாச்சியார்கோயில், நாகப்பட்டினம், சிக்கல், எட்டிகுடி, திருவாரூர், அண்ணன்கோயில், ஒப்பிலியப்பன்கோயில்,

### உயர்நிலைப்பள்ளி

திருவெண்காடு (இரண்டு பள்ளிகள்)
கோயிலூர், கீழ்வேளூர்

வலிவலம்: நாதசுவரப் பள்ளி
திருப்புகலூர் — ஆகமப் பாடசாலை

### கல்லூரி

பூம்புகார் — தெய்வீகப் பேரவையால் நிர்வகிக்கப்படுகின்றது.


தருமையாதீனம் நடத்துவது — தமிழ் கல்லூரி, உயர்நிலைப்பள்ளி, தேவாரப் பாடசாலை, ஆகம பாடசாலை

### அன்பு இல்லங்கள்

சிக்கல், வலிவலம், வைத்தீசுவரன் கோயில், நாச்சியார் கோயில்

### மருத்துவ நிலையங்கள்

வைத்தீசுவரன் கோயில், திருவாய்மூர்



# சிறப்பு மிக்க திருவிழாக்கள்

| தலங்கள் | திருவிழாக்கள் |
|---|---|
| சீர்காழி | திருமுலைப்பால் திருவிழா |
| மாயூரம் | துலா மாத திருவிழா |
| திருநள்ளாறு | சனி பெயர்ச்சி |
| நாகப்பட்டினம் | ஆடிப்பூரம் |
| சிக்கல் | கந்தசஷ்டி |
| எட்டுகுடி | சித்ரா பௌர்ணமி |
| திருவாரூர் | பங்குனி திருவிழா (தேர்-தெப்பத் திருவிழா) |
| கோடிக்கரை | ஆடி, தை-அமாவாசை |
| கும்பகோணம் | மகம், நவராத்திரி |
| திருவையாறு | சப்தஸ்தானம் |
| திருவிடைமருதூர் | தைப்பூசம் |
| பூம்புகார் | ஆடி, தை அமாவசை |




# பழநி

பழநி என்பது 'பொதினி' என்று குறிப்பிடப்பெற்றுள்ளது. பழங்காலத்தில்சேர சோழ பாண்டியர் ஆகிய 'முடியுடை மூவேந்தர்களின் கீழ்ப் பல சிற்றரசர்கள், தமிழகத்தின் பல பகுதிகளிலும் ஆண்டு வந்தனர். அவர்களை 'வேளிர்' எனக் கூறுவர். அவர்களுள் ஆவியர் குடியைச் சேர்ந்தவர்களுக்குப் 'பழநி' என இந்நாளில் வழங்கும் பொதினிமலை உரிமை உடையதாக இருந்தது. மிகப் பழங்காலத்திலேயே முருகன் வழிபாடு அங்குச் சிறப்பாக நிகழ்ந்து வந்தாகல் வேண்டும்.

பழநி என்பது ஒரு சிறந்த பெயர். முருகனின் ஆறுபடை வீடுகளுள், இஃதொன்றே மக்களின் பெயராக வைத்துப் பெரிதும் வழங்கப்படுகிறது. ''படிக்கின்றிலை பழநித் திருநாமம்; படிப்பவர்தான் முடிக்கின்றிலை'' என அருணகிரிநாதர் பெருமான் அருளிய கந்தர் அலங்காரம் இப் பெயரினை விதந்து போற்றுகின்றது. ''காசியின் மீறியபழனி'' ''அதிசயம் அனேகம் உற்ற பழநி'' என அவர் அருளிச் செய்திருப்பது, இத்தலத்தின் பெருமைகளை விளக்கும். இதற்குச் 'சித்தன் வாழ்வு' என்றும் ஒரு பெயர் உண்டு. ஒருவன் ஆகிய எல்லாம் வல்ல சித்தனும், போகர் புலிப்பாணி முதலிய எண்ணிறந்த பல சித்தர்களும் வாழ்ந்து வருதல் குறித்து, அப்பெயர் இதற்கு அமைந்திருத்தல் கூடும்.

ஒரு சமயம் சிவபெருமான்பால் கொணர்ந்து கொடுத்த மாங்கனியின் பொருட்டு முருகப்பெருமான் மயில்மீது ஏறி உலகை வலம் வந்ததும், விநாயகப் பெருமான் சிவபெருமானையும், உமாதேவியையும் வலம் வந்து அதனைப் பெற்றுக்கொண்டதும், அதனால் முருகன் சினம் கொண்டு பொதினி மலைக்குப் போந்து தங்கிவிட, இறைவன் எழுந்தருளி வந்து 'மிகச் சிறந்த ஞானப்பழம் நீயன்றோ? இனிமையே வடிவாக அமைந்த நினக்கு இன்னாத வேறொரு பழமும் வேண்டுவதோ?' எனக் கூறி முருகனை மகிழ்வித்ததும், அதனால் பழநி எனப் பெயர் ஏற்பட்டதும் யாவரும் அறிவர்.



திருவாவிநன்குடி என்னும் பண்டைப் பெயருடைய பழநி என்னும் பழம்பெரும் பதியில் எழுந்தருளி விளங்கும் பரமனாகிய ஆண்டவனுக்கே பழநி ஆண்டவர் என்று பெயர். அன்பர்கள் நினைந்து வழிபடும் திருவுருவங்களை மேற்கொண்டு அருள்புரியும் இயல்பினனாகிய முருகப் பெருமானுக்குச் சிற்ப நூல்களில் பலவகையான அழகிய திருவுருவங்கள் கூறப்பெற்றுள்ளன. இத்திருவுருவங்களுள் கந்தசுவாமி என ஒரு திருவுருவம் உண்டு. ஒரு முகமும் இரண்டு கைகளும் உடையவராய், வலக்கையில் தண்டாயுதம் ஏந்தி, இடக்கையை இடுப்பில் வைத்துக்கொண்டு, கோவணம் உடுத்திய நிலையில், செந்தாமரை மலர்போன்ற நிறத்துடன் நின்ற திருக்கோலத்தில் காட்சி கொடுத்தருள்பவர் கந்தசுவாமி எனப்படும் திருவுருவம் என்று, சிற்ப நூல்கள் கூறும். இவரே பழநியாண்டவர் என வழங்கப்படுபவராவர். கையில் ஞானமாகிய தண்டாயுதம் ஏந்தியிருத்தல் பற்றி, இவருக்கு ஞானதண்டாயுதபாணி எனவும் ஒரு சிறப்புப் பெயர் வழங்கும். தண்டாயுதபாணியாகிய கந்தசுவாமிக்கு மக்களிடையிற் பழநி ஆண்டவர் என்ற சிறப்புப் பெயரே பெரு வழக்காகப் போற்றி வழங்கப்பட்டு வருகின்றது.

பழநி ஆண்டவர் காட்சிக்கு எளியவர்! கருணைக்கு இனியவர்! குணம் என்னும் குன்றேறி நிற்பவர். ''அடல் வேண்டும் ஐந்தன்புலத்தை விடல் வேண்டும் வேண்டிய எல்லாம் ஒருங்கு'' என நம்மனோர் அனைவர்க்கும் அறிவுறுத்தியருள்பவர். குழந்தை உள்ளம் படைத்தவர். எளிதாகவும் விரைவாகவும் அருளை இனிது வழங்கும் இயல்பினர். அதனாலேயே அப்பெருமானை அடியவர் போற்றித் துதித்து வழிபட்டு மகிழ்ந்து வருகின்றனர். கலியுகத்தில் ''கண்கண்ட தெய்வம்'' என் விளங்கிவரும் பழநி ஆண்டவர்தம் பெருமை பகர்தற்கு எளியதோ?



**மெய்யன்புடையீர்!**

இக் கையேட்டினைக் கண்டு ஓரளவு திருக்கோயில்களைப் பற்றியும், திருத்தலங்களின் குறிப்புகளையும் அறிந்து கொண்டிருப்பீர்களென நம்புகிறேன். இக் கையேட்டை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டபோது இம்முயற்சிக்கு பெரிதும் ஊக்குவித்து வழி வகை வகுத்த தமிழக அறநிலைய அமைச்சர் மாண்புமிகு மு. கண்ணப்பன் அவர்களுக்கும் அவ்வப்போது ஊக்கமளித்த ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன் ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், இதைத் தொகுத்து வெளியிடுவதற்கு நிரந்தர நிதியாக ரூ. 10,000/- கொடுத்துதவிய பழனி அருள்மிகு தெண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழுவினருக்கும், கையேடு தொகுத்து வெளிவருவதற்கு உறுதுணையாக இருந்த திருக்கோயில் துணை ஆசிரியர் திரு. கே. எஸ். ஜெகன்னாதன், செயல் அலுவலர்கள்



திருவாளர்கள் கிருஷ்ணசாமி, மகாலிங்கம் ஆகியோருக்கும் நன்றி கடப்பாடுடையேன்.

இக்கையேட்டை பயன்படுத்தும் அன்பர்கள் இது மேலும் சிறந்ததாக அமைய தங்கள் சீரிய கருத்துக்களை தெரிவித்தால் அது அடுத்த பதிப்பை மேலும் பயனுள்ளதாக ஆக்க உறுதுணையாக நிற்கும் என்று கூறி இந்தக் கையேட்டை ஏழாவது இராசராசன் சதய விழாவிலே வெளிக் கொணர்ந்ததில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

தங்கள் அன்புள்ள,

மா. சூர்யராஜ், பி.ஏ.பி.எல்.,
துணை ஆணையர்
அறநிலைய ஆட்சித் துறை
தஞ்சை.







திருவாரூர் அருள்மிகு தியாகராஜசுவாமி கோயில்
கமலாலயமும்—தெப்பமும்

